# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 வைகாசி 09 செவ்வாய்க்கிழமை (23.05.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 176


## நோர்வேத் தூதுவர் 'உதயன்' அலுவலகத்தையும் தீவகப் படுகொலை இடங்களையும் நேரில் பார்வை

யாழ்ப்பாணம், மே 23

ஒட்டுப்படைகளின் கொடூர வெறியாட்டத்துக்கு உள்ளான 'உதயன்' பணிமனையையும், தீவகத்தில் அப்பாவிப் பொதுமக்கள் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட இடங்களையும் கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.

யாழ்ப்பாணத்தின் களநிலைமை குறித்து நேரில் அறியும் நோக்குடன் நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தலைமையிலான குழு நேற்றுக்காலை விமானத்தில் யாழ். வருகை தந்தது.

முதலில் 'உதயன்' பத்திரிகை நிறுவனத்துக்கு அக்குழுவினர் விஜயம் செய்தனர்.

கடந்த 2ஆம் திகதி முன்னிரவு 'உதயன்' அலுவலகம் மீது மேற்கொள்ளப்பட்ட கொலை வெறித் தாக்குதல் தொடர்பாக 'உதயன்', 'சுடர் ஒளி' பத்திரிகைகளின் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன் மற்றும் ஆசிரியர் பீடம், விளம்பரப்பகுதி ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஆகியோருடன் நோர்வேத் தூதுவர் கலந்துரையாடினார்.

தாக்குதலால் சேதமடைந்த பகுதிகளைப் பார்வையிட்ட அவர் முழுவிவரங்களையும் விரிவாகக்கேட்டறிந்து கொண்டார்.

அதன் பின்னர் நண்பகல் 12.30 மணியளவில் யாழ்.செயலகத்துக்குச் சென்ற நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் அரச அதிபர் கே. கணேஷுடன் (08ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வேத் தூதுவர் கிளிநொச்சி விரைவு

## போவர் இன்று கொழும்புக்குப் புறப்பாடு சொல்ஹெய்ம் வெள்ளியன்று வருகிறார்

யாழ்ப்பாணம்,மே23

**சமாதானமுயற்சிகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடிநிலையைப் போக்கும் வழிவகைகள் குறித்து ஆராயும் நோக்கில் கிளிநொச்சி விரைந்துள்ளார், இந்த முயற்சிகளில் அனுசரணைப் பணி வகிக்கும் நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர்.**

**இதேசமயம், விசேட சமாதானத் தூதுவர் ஹன்ஸன் போவர் இன்று நோர்வேயிலிருந்து புறப்பட்டு நாளை கொழும்பு வருகிறார். அவரைத் தொடர்ந்து எதிர்வரும் வெள்ளிக்கிழமை நோர்வேயின் அமைச்சர் எரிக் சொல்ஹெய்மும் கொழும்பு வருகிறார் .**

நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் இன்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரைச் சந்தித்து விரிவான பேச்சை நடத்தவுள்ளார்.

இந்தத் தகவலை நேற்று முற்பகல் 'உதயன்' அலுவலகத்திற்கு வந்திருந்தபோதே நோர்வேத் தூதுவரே வெளியிட்டார்.

சமாதான முயற்சிகள் தற்சமயம் ஸ்தம்பித நிலையில் உள்ளன. செவ்வாயன்று (இன்று) காலையில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்திக்கிறேன். தற்போதுள்ள தேக்க நிலையை நீக்குவதற்கான வழிமுறைகள் குறித்து இந்தப் பேச்சில் விரிவாக ஆராயவிருக்கிறேன். இந்தப் பேச்சின் மூலம் சமாதான முயற்சிகள் அடுத்த கட்டத்துக்கு நகரும் என நம்புகிறேன். - என்றார் அவர்.

இதேவேளை, சமாதானமுயற்சிகளில் (08ஆம் பக்கம் பார்க்க)

## கோப்பாயில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம்,மே 23

கோப்பாயில் நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் குடும்பஸ்தர் ஒருவர் கொல்லப்பட்டார்.

அம்பாறையைச் சேர்ந்தவரும், கோப்பாயில் வசித்து வந்தவருமான, ஜமால் டீன் மொகமட் றொசான் (வயது 25) என்ற குடும்பஸ்தரே கொல்லப்பட்டவராவார்.

மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இவரை வேறு மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று விசாரணையில் தெரி (08ஆம் பக்கம் பார்க்க)

## சர்வமதக் குழு கிளிநொச்சிக்கு இன்று விஜயம்

கிளிநொச்சி, மே 23

தற்சமயம் தேக்கமடைந்துள்ள சமாதானப் பேச்சுகளை மீள ஆரம்பிக்குமாறு விடுதலைப் புலிகளை வலியுறுத்தும் நோக்கோடு தெற்கு சர்வமதக் குழுவொன்று இன்று கிளிநொச்சி வருகின்றது.

நேற்றுக்காலை வவுனியா வந்தடைந்த இந்த சர்வமதக்குழு இன்றுகாலை கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவுடன் பேச்சு நடத்தும்.

சமாதானப் பேச்சுகளை மீள ஆரம்பித்து சுமுகநிலையை உருவாக்கவேண்டும் என அக்குழு புலிகளைக் கோரவிருக்கின்றது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## கந்தரோடையில் சூடு யாக்கரையில் மோதல்!

கந்தரோடையில் நேற்று ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர்மீது மோட்டார்சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்கள் இருவர் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

விடுதலைப் புலிகளே இத்தாக்குதலை நடத்தினர் என்றும் - படையினர் திருப்பிச் சுட்டதில் மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் அமர்ந்திருந்தவர் காயமடைந்ததுடன், ரி-56 ரகத் துப்பாக்கியையும் தவறவிட்டுச் சென்றனர் என்றும் படைத்தரப்புத் தெரி (08ஆம் பக்கம் பார்க்க)

## நாளையே பேச்சுக்குப் புலிகள் தயார் தடைகளை அரசுதான் நீக்க வேண்டும்

### யாழ்., மன்னார் ஆயர்களிடம் தமிழ்ச்செல்வன் விளக்கம்

கிளிநொச்சி, மே 23

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் விடுதலைப் புலிகள் தரப்பில் எந்தவிதத் தடையும் இல்லை. பேச்சுக்கான தடைகளை அரசு நீக்கினால் நாளையே பேச்சை ஆரம்பிக்க முடியும்.

- இப்படிக் கூறியுள்ளார், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன்.

யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம், மன்னார் ஆயர் அதிவண. இராயப்பு யோசப் ஆகியோரை நேற்று முற்பகல் 11 மணிக்கு தமிழ்ச்செல்வன் சந்தித்தார். அப்போதே அவர் இதை அவர்களிடம் தெரிவித்தார். கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

தொடரும் படுகொலைகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் -

முடங்கிப் போயுள்ள பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் - ஆயர்கள் தமிழ்ச்செல் வனிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதற்குப் பதிலளித்த தமிழ்ச் செல்வன், பேச்சுக்கள் தடைப்பட்டுப் போனமைக்குக் காரணமாக அமைந்த விடயங்களை விளக் (08ஆம் பக்கம் பார்க்க)

## விடத்தல்பளை குடும்பஸ்தர் கொலை: சிப்பாய் கைதாகி விளக்கமறியலில்!

தென்மராட்சி,மே 23

விடத்தல்பளையில் நேற்றுமுன்தினம் தோட்டத்துக்குச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின்பேரில் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான அருணாசலம் சுரேஷ் குணபாலன் (வயது - 42) நேற்றுமுன்தினம் விடத்தல்பளையில் உள்ள தனது தோட்டத்தைப் பார்வையிடச் சென்ற சமயம் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

நேற்றுக் காலை சம்பவ இடத்துக்குச் சென்ற சாவகச்சேரி நீதிவான், விசாரணை நடத்தினார். குறிப்பிட்ட குடும்பஸ்தர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியவர் என்று கூறப்படும் சிப்பாயைக் கைது செய்யுமாறும் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார்.

இதனையடுத்து, கொடிகாமம் பொலீஸா (08ஆம் பக்கம் பார்க்க)



நேற்று முன்தினம் வீரச்சாவடைந்த விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட துணைத் தளபதி ரமணனின் வித்துடல் கரடியனாறு தேனகத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அப்போது வித்துடலுக்கு மட்டு - அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் பானு புலிக்கொடி போர்த்தி கௌரவித்தார்.

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உதயன் பணிமனைக்கு நேற்று விஜயம் செய்த நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், தூதரின் பிரத்தியேகச் செயலர் எரிக் ஆகியோருக்கு உதயன் மீதான தாக்குதல் குறித்து நிர்வாக இயக்குநர் விளக்கமளிப்பதை முதற் படத்திலும் தூதருடன் வந்திருந்த கண்காணிப்புக் குழுவினரை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள்: சுரேன், தமிழினியன்)

# கல்விச் செயற்பாடுகள் தடங்கலின்றி தொடர்வதற்கு உதவி செய்யுங்கள்

## நோர்வேத் தூதரிடம் த.ஆ.சங்கம் விடுத்த கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே 23

யாழ்ப்பாண மாவட்டத்தில் கல்வித்துறையினர் முகம் கொடுத்துவரும் இடையூறுகளை சம்பந்தப்பட்ட தரப்பினர்களிடம் எடுத்துக்கூறி சுமுக நிலைமை ஏற்பட உதவி புரியுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரிடம் கையளித்த மகஜரில் கேட்டுக்கொண்டுள்ளது.

சங்கத்தின் சிரேஷ்ட உதவிப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் நோர்வேத் தூதரிடம் கையளித்த மகஜரில் தெரிவித் திருப்பதாவது:-

தற்போது இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற முதலாவது பேச்சுவார்த்தைகளையடுத்து இலங்கைப் பாதுகாப்புப் படைகளினால் மர்மமான கொலைகளும், கைதுகளும், சுற்றிவளைப்புத் தேடல்களும் ஏராளமாக மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.

இதன் காரணமாக பாடசாலைகள் உட்பட எல்லா பொது அமைப்புகளாலும் கடந்த மூன்று வாரங்களாக பணிப்புறக்கணிப்பு இடம் பெற்றுவருகின்றது.

பாடசாலைப் புறக்கணிப்பின் காரணமாக - கற்றல் கற்பித்தல் தொடர்பான செயற்பாடுகள் சீர்குலைந்து பாடசாலைகள் முறையாக நடைபெறுவதும் தடைப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான மீட்டல் பணிகளும் முடங்கிப் போயுள்ளன. தனியார் கல்வி நிறுவனங்களும் மூடப்பட்டுள்ளன.

பாடசாலைகளுக்கருகில் இராணுவ முகாம்களும் சோதனைச் சாவடிகளும் இருப்பதுடன், அடிக் கடி சோதனைகளை அவர்கள் மேற்கொள்வதால் ஆசிரியர்களதும் மாணவர்களதும் சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாமலுமிருக்கின்றது.

இந்த நிலைமைகளை சம்பந்தப்பட்ட தரப்பினர்களிடம் எடுத்துக்கூறி தமிழ் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் இடர்பாடின்றித் தொடர்வதற்கு உதவுங்கள்.

- இவ்வாறு பஞ்சலிங்கம் நோர்வேத் தூதரிடம் கோரியுள்ளார். (ப)

## ஊரடங்கு வேளை மரங்கள் திருட்டு

தென்மராட்சி கிழக்கு,மே23

வரணி - குடத்தனை வீதியில் இடம் பெற்றுவரும் பாலக் கட்டுமானப் பணிக்குப் பயன்படுத்தப்பட்ட மரப்பலகைகள் அண்மையில் திருட்டுப்போயுள்ளன என்று பணியாளர்கள் கூறுகின்றனர்.

அண்மையில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டபோதே மக்கள் நடமாட்டமற்ற சூழலைப் பயன்படுத்தி திருடர்கள் மரப் பலகைகளை அபகரித்துள்ளனர் என்று கூறப்படுகிறது. (122)



குடாநாட்டுக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட இலங்கைக்கான நோர்வேத் தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கரை யாழ்.செயலகத்தில் அரச அதிபர் கே.கணேஷ் வரவேற்று அழைத்துச் செல்வதை முதற் படத்திலும் படுகொலைகள் நடந்த அல்லைப்பிட்டிப் பகுதியை நோர்வேத் தூதர் பார்வையிடுவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

## சடலத்தைப் பொறுப்பேற்க வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,மே23

யாழ்.ஆஸ்பத்திரியில் கடந்த 4ஆம் திகதி சுகயீனம் காரணமாக உயிரிழந்தவரின் சடலத்தைப் பொறுப்பேற்குமாறு ஆஸ்பத்திரி நிர்வாகம் கேட்டுள்ளது.

உடுப்பிட்டி, பூபதி என்னும் இடத்தைச் சேர்ந்த கே.ராகவன்பிள்ளை (வயது-80) என்பவரின் சடலமே உறவினர் பொறுப்பேற்பதற்காக யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (15)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே23

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் 15 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலையின் விளையாட்டுப் பொறுப்பாசிரியர்களைத் தவறாது கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட இணைப்பாளர் கேட்டுள்ளார். (190)

## விபத்தில் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம்,மே23

கொடிகாமத்தில் லொறிகள் இரண்டு மோதி விபத்துக்குள்ளாகின. நேற்றுப் பிற்பகல் 10 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் கொடிகாமம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பணியாளர் ஒருவர் உயிரிழந்தார்.

கொடிகாமத்தைச் சேர்ந்த சுப்பையா இந்திரகுமார் (வயது 42) என்பவரே உயிரிழந்தவராவார். விபத்தில் சம்பந்தப்பட்ட ப.நோ.கூ. சங்க லொறியில் பிரஸ்தாப நபர் பயணித்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (15)

# புலிகள் மீதான தடை: இந்தியா நீடித்தது!

சென்னை, மே 23

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது விதித்திருக்கும் தடையை இந்தியா மேலும் நீடித்திருக்கின்றது. விடுதலைப் புலிகள் அமைப்பு இந்தியாவில் தொடர்ந்தும் தடைசெய்யப்பட்ட இயக்கமாக இருக்குமென்று கடந்த 14 ஆம் திகதி இந்திய மத்திய அரசு அறிவித்ததையடுத்து, கடந்த 14ஆம் திகதி தமிழக அரசும் அதனை மறு ஆணையாகப் பிறப்பித்துள்ளது.

மத்திய அரசின் அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

விடுதலைப் புலிகள் இயக்கம் இலங்கையைச் சேர்ந்தது என்றாலும், அதற்கு அனுதாபிகள், ஆதரவாளர்கள் மற்றும் முகவர்கள் இந்திய மண்ணில் உள்ளனர். அனைத்துத் தமிழர்களுக்கும் தனி ஈழம் என்ற விடுதலைப் புலிகளின் நோக்கம், இந்திய ஒருமைப்பாட்டுக்கும், ஒருங்கிணைப்புக்கும் அச்சுறுத்தலானது. இந்தியாவில் ஒரு பகுதியைப் பிரிவினை கோரத் தூண்டும் இந்தச் செயலால், நம் நாட்டின் சட்டவிரோதச் செயற்பாட்டுக்குள் இந்த விவகாரம் வருகிறது.

இலங்கையில் ஏற்படும் பிரச்சினைகளை வைத்து, விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் இங்கு பேரணி நடத்துவது, ஆர்ப்பாட்டம் செய்வது போன்றவற்றில் ஈடுபடுவதும் தமிழகத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும். தமிழீழம் என்பதே இங்குள்ள விடுதலைப் புலிகள் ஆதரவு இயக்கங்களின் இலட்சியமாகவும் உள்ளது. எனவே, விடுதலைப் புலிகளைச் சட்டபூர்வ அமைப்பாக அங்கீகரித்து செயற்பட அனுமதித்தால், நாட்டின் இறையாண்மைக்குப் பெரும் ஆபத்து ஏற்படும்.

விடுதலைப் புலிகள் இயக்கம் மிகவும் சக்தி வாய்ந்த, நவீன ஆயுதங்களைக் கொண்ட, அமைப்பு ரீதியாகச் செயற்படும் தீவிரவாத இயக்கமாக இலங்கையில் இன்னும் இருந்து வருகிறது. இதற்குத் தமிழகத்திலும், தென்னிந்தியாவின் சில பகுதிகளிலும் வலுவான தொடர்புகள் உள்ளன. பெற்றோல், டீசல், மருந்துகள் போன்ற அத்தியாவசியப் பொருள்களைக் கடத்திச் செல்வதற்கு அடித்தளமாகத் தமிழகத்தை விடுதலைப் புலிகள் தொடர்ந்து பயன்படுத்தி வருகின்றனர். இந்தியாவிலுள்ள விடுதலைப் புலிகளின் ஆதரவு அமைப்புகள், ஆதரவாளர்கள் போன்றோரின் செயற்பாடுகள், இந்த இயக்கத்தின் மீதான தடை அமுலில் இருந்தபோதும் அவர்கள் புலிகளுக்குத் தொடர்ந்து ஆதரவு அளித்து வருகின்றனர் என்பதைப் புலப்படுத்துகின்றன. எனவே, விடுதலைப் புலிகள் அமைப்பு இந்தியாவுக்குத் தொடர்ந்து அச்சுறுத்தலாக உள்ளதால் அதைச் சட்டவிரோத அமைப்பாக மத்திய அரசு அறிவிக்கிறது. சட்டவிரோதச் செயற்பாடுகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் இந்த இயக்கத்துக்கு மத்திய அரசு உடனடியாகத் தடை விதிக்கிறது.

- இவ்வாறு அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பாடசாலை மாணவர் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம்,மே 23

யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவிகளில், இன்று நடைபெறும் வலய மட்ட உடற் பயிற்சிப் போட்டிகளில் பங்குபற்றும் மாணவிகளை இன்று காலை 9 மணிக்கு பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார்.

* * *

யாழ்ப்பாணம்,மே23

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவியர்களுக்கான மீட்டல் வகுப்புகள் நாளை புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

வகுப்புகள் காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை நடைபெறும் என கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார்.

* * *

யாழ்ப்பாணம்,மே23

கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்தின் தரம் 4, 5, 9, 10, 11, 12 ஆகிய வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான மேலதிகவகுப்புகள் நாளை புதன்கிழமை தொடக்கம் நடத்தப்படவுள்ளன என்றும் -

சகல பாட ஆசிரியர்களையும், மாணவர்களையும் நாளை காலை 8.30 மணிக்கு தவறாது சமுகமளிக்குமாறு அதிபர் ப.முத்துலிங்கம் கேட்டுள்ளார்.

* * *

யாழ்ப்பாணம்,மே23

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் தரம் 5 வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினமே தரம் 5 மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் ஆரம்பமாகும் என்றும் பாடசாலை அதிபர் திருமதி செ.சகாதேவன் அறிவித்துள்ளார்.

* * *

யாழ்ப்பாணம்,மே23

மானிப்பாய் மகளிர் கல்லூரியின் சகல மாணவிகளையும் ஆசிரியர்களையும் நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலைக்கு தவறாது சமுகமளிக்குமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார்.

* * *

யாழ்ப்பாணம்,மே23

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் கல்விபயிலும் தரம் 9,10,11 மாணவர்களுக்கான விசேட கலந்துரையாடல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சகல மாணவர்களையும் கலந்துதுரையாடலிற்கு சமுகம் தருமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார்.

* * *

யாழ்ப்பாணம்,மே23

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் கல்வி கற்கும் தரம் 5 மற்றும் தரம் 9 தொடக்கம் 11 வரையிலான மாணவர்களை இன்று காலை 9.30 மணிக்கு பாடசாலைக்குச் சமுகந்தருமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார்.

## மட்டக்களப்பில் சூடு; மாணவர் உயிரிழப்பு

மட்டக்களப்பு,மே23

மட்டக்களப்பு நகரப் பகுதியில் நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒருவர் உயிரிழந்தார்.

அதே இடத்தைச் சேர்ந்த இக்கினேசியஸ் பெட்மன் பாக்லட் (வயது 23) என்ற மாணவனே உயிரிழந்தவராவார். தொழில்நுட்பக் கல்லூரியில் வகுப்பு முடிந்து வீடு திரும்பும் வழியில் இவர் சுடப்பட்டார்.

## உள்ளகப்பயிற்சி ஆசிரியர் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,மே23

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கான சித்திரை மாதக் கொடுப்பனவு நாளைமறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக உப பீடாதிபதி எஸ்.ஆர்.சத்தியேந்திரம் பிள்ளை தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837

## ஐரோப்பிய ஒன்றியத்தின் உத்தேசத் தடை கண்காணிப்புப் பணியையும் பாதிக்கும்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்யப்பட்ட, பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்க்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உத்தேச நிலைப்பாடு இலங்கையில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பணியை மோசமாகப் பாதிக்கக் கூடும் எனக் கருதப்படுகின்றது.

இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புப் பணியை டென்மார்க், சுவீடன், பின்லாந்து, நோர்வே, ஐஸ்லாந்து ஆகிய ஐந்து ஸ்கண்டிநேவிய நாடுகளின் பிரதிநிதிகள் மேற்கொண்டுவருகின்றனர். சுவீடன் நாட்டின் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்ஸன் கண்காணிப்புக் குழுவுக்குத் தலைமை வகிக்கின்றார். அவரின் கீழ் சுமார் அறுபது கண்காணிப்பாளர்கள் பணியாற்றுகின்றனர்.

மேற்படி கண்காணிப்புப் பணிக்கு இந்த அறுபது கண்காணிப்பாளர்களும் போதுமானவர்கள் அல்லர் என்ற நிலையில் மேலும் பதினைந்து பேரைப் பணிக்கு சேர்ப்பது குறித்துத் தீவிரமாக ஆராயப்பட்டு வருகின்றது. அதற்கான முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையிலேயே ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தடை விதிப்புப் பற்றிய ஆரம்பத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

இலங்கையில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் ஐந்து நாடுகளில் மூன்று - டென்மார்க், சுவீடன், பின்லாந்து ஆகியவை - ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்தவை.

இந்த நாடுகளை உள்ளடக்கிய ஐரோப்பிய ஒன்றியமும், அதன் அமைச்சரவையும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்யும் தீர்மானத்துக்கு வந்தால் -

தனது நாட்டில் தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் உள்ள ஓர் இயக்கத்துடன் நேரடியாகச் சம்பந்தப்பட்ட - அந்த இயக்கத்தை ஒரு தரப்பாகக் கொண்ட - யுத்த நிறுத்தக் கண்காணிப்பை, அந்த நாட்டின் கண்காணிப்பாளர்கள் மேற்கொள்ள முடியுமா என்ற கேள்வி எழுகின்றது.

அதுமட்டுமல்ல, தம்மைத் தடை செய்யப்பட்ட ஓர் இயக்கமாக அறிவித்திருக்கும் ஒரு நாட்டின் கண்காணிப்பாளர்கள், தமது அமைப்பு சம்பந்தப்பட்ட யுத்த நிறுத்த ஏற்பாடுகளை நடுநிலையாளர்களாக நின்று கவனிப்பதை விடுதலைப் புலிகள் இயக்கம் கொள்கை அடிப்படையில் தன்னும் ஏற்றுக்கொள்ளுமா என்ற கேள்வியும் எழுகின்றது.

இவ்விடயத்தில் - கண்காணிப்புப் பணி சம்பந்தப்பட்ட விவகாரத்தில் - புலிகள் அமைப்பு இதுவரை எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை. கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் ஒரு நாடு, தனது அமைப்பை உத்தியோக பூர்வமாகத் தடை செய்ய முன்னர் - அத்தகைய தடை வரும் என்ற எதிர்பார்ப்பில் - கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் ஒரு நாட்டுக்கு எதிராகப் புலிகள் அமைப்பு முற்கூட்டியே பகிரங்கமாகக் கருத்துக் கூறமுடியாது. அப்படிக் கூறமுற்படுவது பொருத்தமற்றதாகும்.

எனவே, கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள ஒரு நாடு, புலிகள் அமைப்பைத் தடை செய்தாலும், அந்த நாட்டின் கண்காணிப்புப் பணியைப் புலிகள் அமைப்பு ஆட்சேபிக்காமல் தொடர்ந்து ஏற்றுக் கொண்டே தீரும் என்ற ஒரு தலைப்பட்சமான முடிவுக்கு நாம் இப்போதே வந்துவிட முடியாது.

இலங்கை அரசு, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்திருக்கும்வரை அந்த இயக்கத்துடன் அமைதிப் பேச்சுக் கான ஆரம்ப நடவடிக்கைகளைக் கூட எடுக்க மாட்டோம் என்று விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைமை 2002 ஆம் ஆண்டு முற்பகுதியில் இறுக்கமான பிடிவாதத்துடன் இருந்ததும் -

புலிகள் மீதான தடையை இலங்கை அரசு உத்தியோக பூர்வமாக நீக்கிய பின்னரே அமைதி முயற்சிகளின் முன்நகர்வுக்குப் புலிகள் இயக்கம் அசைந்து கொடுத்தது என்பதும் - கவனிக்கத்தக்கவை.

புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரை இந்தத் தடை விவகாரம் உணர்வு ரீதியான விடயங்களைத் தொடக் கூடியது. எனவே, சர்வதேச பொலீஸ்காரனான அமெரிக்காவுக்குத் தலையாட்டுவதற்காக -அமெரிக்காவைத் திருப்திப்படுத்துவதற்காக - புலிகள் இயக்கத்தைத் தடை செய்யும் தீர்மானத்துக்கு இணங்கி விட்டு, புலிகள் தரப்போடும் - ஈழத் தமிழர் தரப்போடும் - வழமையான தொர்பாடல்களைத் தொடரலாம் என்று ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இலகுவாகக் கருதிவிடக் கூடாது.

ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத் தீர்மானத்தின் அடிப்படையில் புலிகளைத் தடை செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றிய அமைச்சரவை தீர்மானிக்குமானால் -

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்துக்கு அமைதித் தீர்வு காண அனுசரணைத் தரப்பான நோர்வே எடுத்து வரும் முயற்சிகள் பெரிதும் பாதிக்கப்படும். இந்த எத்தனத்தில் ஈடுபட்டிருக்கும் நோர்வே சர்வதேச ரீதியில் தனிமைப்படுத்தப்பட்டு, கைவிடப்படுவது ஒருபுறமிருக்க -

இவ்விவகாரம் தொடர்பான யுத்தநிறுத்தக் கண்காணிப்பில் ஈடுபட்டிருக்கும் நோர்வே, ஐஸ்லாந்து போன்ற ஐரோப்பிய ஒன்றியத்தைச் சாராத நாடுகளும் கண்காணிப்புப் பணியில் தனித்து விடப்படும் சூழ்நிலை உருவாவதும் தவிர்க்க முடியாமல் போகலாம்.

ஏற்கனவே பற்றாக்குறையில் இருக்கும் போர் நிறுத்தக் கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்து, கண்காணிப்புப் பணி முற்றாகப் பாதிப்புற, அது போர் மீள மூளுவதற்கான வாய்ப்பை மேலும் ஏற்படுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு வழங்க வலயப் பணிப்பாளர்களுக்கு அதிகாரம்

அச்சுவேலி,மே23

ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதற்கான அதிகாரத்தை வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழு வடக்கு-கிழக்கில் உள்ள 24 வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் வழங்கியுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநரின் சிபார்சுக்கு அமைய பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு இந்த அதிகாரத்தை வழங்கியுள்ளார்.

திருத்தி அமைக்கப்பட்ட ஆசிரியர் சேவைப்பிரமாணக் குறிப்பின் பிரகாரம் ஆசிரியர்களுக்கு சேவை அடிப்படையிலும் கல்வி மற்றும் தொழில்சார் கல்வித் தகைமைகள் அடிப்படையிலும் புள்ளிகள் வழங்கப்பட்டு பதவி உயர்வுகள் வழங்கப்படவுள்ளன.

கடந்தவருடம் மே மாதம் திருத்தி அமைக்கப்பட்ட சுற்றறிக்கை வெளியிடப்பட்ட போதிலும் ஒருவருட காலமாக இப்பதவி உயர்வுகள் உரியமுறையில் வழங்கப்படவில்லை. பின்பற்றப்பட்டு வந்த நிர்வாக நடைமுறைகளினால் பதவி உயர்வுகள் வழங்குவதில் தடங்கல் ஏற்பட்டு வந்தது.

புதிய நடைமுறையின்படி வலயக் கல்விப்பணிப்பாளர்கள் ஆசிரியர் சேவைத் தரங்களின் ஐந்து வகைப்பாட்டிற்குமான பதவி உயர்வுகளையும் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் எஸ்.பாலசிங்கம் கடந்தவாரம் வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் ஊடாக வலயக் கல்விப் பணிப்பாளருக்கு ஆசிரியர் பதவி உயர்வுகளை வழங்குவதற்கான அதிகாரத்தை வழங்கியுள்ளார்.

மாகாணக் கல்வி அமைச்சு வடக்கு-கிழக்கில் உள்ள 24 வலயக்கல்வி அலுவலகங்களிலும் ஒரேவிதமான நடைமுறையில் பதவி உயர்வுகளை வழங்குவதற்கு உரிய ஏற்பாடு செய்துள்ளது.

(11)

## அல்லைப்பிட்டி உப அலுவலகத்தில் செயற்பாடுகள் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,மே23

வேலணை பிரதேச சபையின் கீழ் உள்ள அல்லைப்பிட்டி உப அலுவலகத்தின் செயற்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

அல்லைப்பிட்டிப் பகுதியில் வசித்த மக்கள் அங்கிருந்து வெளியேறிய நிலையில் உள்ளூராட்சி சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அல்லைப்பிட்டி உப அலுவலக பொறுப்பதிகாரி நிகால் சுரேன்குமார் மற்றும் பணியாளர்கள் தலைமை அலுவலகத்துடன் இணைந்து பணியாற்றவுள்ளனர் என்று கூறப்பட்டது.

(185)

## குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்தோருக்கு உதவிப்பொருள்கள்

வட்டக்கச்சி,மே23

சீருடையினரின் கெடுபிடிகளை அடுத்து யாழ். குடாநாட்டிலிருந்து இடம் பெயர்ந்து வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளில் தங்கியுள்ள 460 குடும்பங்களுக்கு கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனம் அண்மையில் உதவிப் பொருள்களை வழங்கியது.

இலங்கைக்கான சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நிதியுதவியுடன் இந்த உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

இராமநாதபுரம், மாவடி ஆகிய பகுதிகளில் வசிப்போருக்கு கடந்த 17ஆம் திகதியும் -

பன்னங்கண்டி சிவிக்சென்ரர், வட்டக்கச்சி மாயவனூர் பகுதிகளில் வசிப்போருக்கு 18ஆம் திகதியும் - உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.

கூரைவிரிப்பு, சமையல் அடுப்பு, குழந்தைகளுக்கான பொருள்கள் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருள்களே இவ்வாறு வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

(405)

## தென்மராட்சி சங்கக் கடைகளில் மண்ணெண்ணெய் விலை வித்தியாசம்

தென்மராட்சி,மே23

தென்மராட்சிப் பிரதேச பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கடைகளில் மாறுபட்ட விலைகளில் மண்ணெண்ணெய் விற்கப்படுவதாக பொதுமக்கள் கூறுகின்றனர்.

ஒரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் கடையில் ஒரு லீற்றர் 42 ரூபாவுக்கும் மற்றொரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கடையில் 66ரூபாவுக்கும் மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்படுகிறது.

மண்ணெண்ணெய் விலை அதிகரிப்புப் பற்றி அரசினால் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படாதபோதிலும் ப.நோ.கூ சங்கங்கள் திடீரென விலை அதிகரித்துள்ளமை குறித்து மக்கள் விசனம் தெரிவித்தனர்.

## சுயதொழில்களில் ஈடுபடுவதற்கு வலுவிழந்தோருக்கு கலைப் பயிற்சி

வலுவிழந்தோரில் 16 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு சுயதொழிலுக்கான பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இதில் ஓவியம் மற்றும் சிற்பம் போன்ற கலைகள் கற்பிக்கப்பட்டு அதன் அடிப்படையில் சுயதொழில்கள் ஆரம்பிக்க உதவி மேற்கொள்ளப்படும்.

இதற்கென 16 வயதுக்கு மேற்பட்ட வலுவிழந்தோரில் ஓவியம் மற்றும் சிற்பம் ஆகியவற்றைக் கற்க விரும்புபவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பயிற்சி ஆறு மாதங்களைக் கொண்டது. பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர்களுக்கு நாளாந்தம் 75 ரூபா வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. இப்பயிற்சியில் சேரவிரும்புவோர் தத்தமது பிரதேச செயலகங்களில் உள்ள சமூக சேவைப் பிரிவுடன் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(70)

## கணனிப் பயிற்சி வழங்குவதற்கென பாடசாலைகளுக்கு சூரியமின்கலம்

வடக்கு - கிழக்கில் மின்சார வசதியில்லாத பாடசாலைகளில் கணனிப் பயிற்சிக்கென சூரியமின்கலம் மூலம் மின்சாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கல்வியமைச்சு இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இதற்காக வடக்கு-கிழக்கில் மின்சார வசதியில்லாது இயங்கும் பாடசாலைகளின் விவரம் சேகரிக்கப்பட்டு வருகிறது.

மின்சாரம் இல்லாததால் மேற்கொள்ளமுடியாதுள்ள கனணிக் கற்கை நெறிகள், பாடசாலையின் பெயர்,மாணவர்களின் எண்ணிக்கை போன்றவற்றை அனுப்பிவைக்குமாறு கல்விப் பணிப்பாளர்களை கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த கேட்டுள்ளார்.

நாடளாவிய ரீதியில் முதற்கட்டமாக மின்சார வசதியற்ற பின்தங்கிய இருநூறு பாடசாலைகளுக்கு சூரிய மின்கலம் மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு கணனிக் கற்கைநெறி மேற்கொள்ளப்படவுள்ளது.

கல்விப் பணிப்பாளர்களினால் அனுப்பிவைக்கப்படும் தகவல்களுக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில் சூரிய மின்கலம் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (185)

### நாளை

வைகாசி - 10
புதன்கிழமை
24.05.2006
திதி : துவாதசி
பிற்பகல் : 04.01
நட்சத்திரம் : ரேவதி
முற்பகல் : 10.36
சுபநேரம் : 04.22 - 05.52
ராகுகாலம் : 11.52 - 01.22

## ஐ.தே.க.கோட்டையைத் தகர்க்க முயன்று கம்பஹாவை கோட்டைவிட்டது அரசுத் தரப்பு

### ஸ்ரீகோத்தாவிலிருந்து அறிக்கை

ஜனநாயகப் பண்புகளை மீறி மக்களின் ஆணையைப் பறித்து, ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்புக் கோட்டையை தகர்க்கக் கேவலமான மோசடிகளைச் செய்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கட்சி, தனது கோட்டையான கம்பஹாவையும் கூட இழந்து விட்டது!.

- இவ்வாறு தெரிவித்து நேற்று முன்தினம் அறிக்கையொன்றை விடுத்திருக்கிறது ஐக்கிய தேசியக் கட்சி. நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் குறித்து அறிக்கையொன்றை விடுத்திருக்கும் ஐ.தே.கட்சி தலைமை அலுவலகமான ஸ்ரீகோத்தா, அதில் மேலும் தெரிவித் திருப்பதாவது:-

ஜனநாயகப் பண்புகளுக்கு முன்னுரிமை கொடுத்துவந்த ஐக்கிய தேசியக் கட்சி 2002 ஆம் ஆண்டில் புதிய அரசியல் கலாசாரமொன்றை ஆரம்பித்து, தொழில்நுட்பக் கோளாறுகளால் நிரகரிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்பை அது வழங்கியது. ஆனால், சுதந்திரக் கூட்டமைப்பு அரசு இம்முறை அந்தச் சம்பிரதாயத்தை மீறி கொழும்பு மாநகரசபையைக் கைப்பற்றும் நோக்கில் பேராசையுடன் மக்களின் ஆணைக்கு விலங்கிட முயன்றது.

இதற்காக அரசும், அதன் பங்காளிகளும் மோசமான முறைகேடுகளில் ஈடுபட்டனர். அரச ஊடகங்களும், அரச வளங்களும் இதற்காகப் பயன்படுத்தப்பட்டன. ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லமும் கொழும்பு மேயர் வேட்பாளரின் தேர்தல் அலுவலகமாகப் பயன்படுத்தப்பட்டது. மிக இழிவான முறையில் தேர்தல் பிரசாரம் முன்னெடுக் கப்பட்டது.

ஆனால், மஹிந்த சிந்தனையையும், அதற்குத் துணை நின்ற ஜே.வி.பி, ஜாதிக ஹெலஉறுமய போன்றவற்றையும் நிராகரித்த மக்கள், அதன் மூலம் தாம் முட்டாள்கள் அல்லர் என்று நிரூபித்திருக்கின்றனர். கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது இப்போதைய அரசு முன்வைத்த திட்டங்களை மக்கள் இப்போதுதான் உணர ஆரம்பித்திருக்கின்றனர். எவ்வளவோ துன்பங்களை - சவால்களை - தாங்கி ஐ.தே.கவை ஆதரித்த மக்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

### உதயவாக்கு

**இதயம் என்பது அறிவைவிட உயர்ந்தது. மூளையில் அறிவைச் சேர்ப்பதைக் காட்டிலும் இதயத்தைப் பண்படுத்தி வளர்ப்பதிலே கவனம் செலுத்துங்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படகுகள் மூலம் தமிழகத்துக்குச் செல்வதற்காக திருமலைத் தமிழர்கள் மன்னாருக்கு படையெடுப்பு

## அங்கு அவர்களிடம் ஏமாற்றுப் பேர்வழிகள் கைவரிசை

மன்னார், மே 23

திருகோணமலையில் தொடர்ந்தும் நிலவிவருகின்ற அச்சமான சூழ்நிலை காரணமாக அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளைச் சேர்ந்த தமிழ்மக்கள் செய்வதறியாத நிலையில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அங்கு தமிழ் மக்கள் மீது தொடர்ந்தும் வன்முறைகள் இடம்பெற்றுவருவதால் படகுகள் மூலம் தமிழகத்துக்குச் செல்வதற்காக பல குடும்பங்கள் திருமலையிலிருந்து நாளாந்தம் மன்னாருக்குச் சென்றுகொண்டிருக்கின்றன என்றும் கூறப்படுகிறது.

திருகோணமலை, திருக்கடலூர், 10ஆம் குறிச்சி, அலெக்ஸ் தோட்டம் உட்பட கரையோரப்பகுதிகளைச் சேர்ந்த தமிழ் மக்களே இவ்வாறு தமது வீடுகளையும், உடைமைகளையும் விட்டுவிட்டு கையில் அகப்பட்ட பொருள்களுடன் தமிழகம் புறப்படுகின்றனர்.

மன்னாருக்குச் செல்பவர்களில் பலர் அங்கிருந்து படகுமூலம் தமிழகம் நோக்கிச் செல்வதற்கு யாரை, எப்படி அணுகுவது என்பது தெரியாமல் திண்டாடுகின்றனர்.

இந்த மக்களிடம் சில ஏமாற்றுப் பேர்வழிகள் ஏமாற்றிப் பணம் கறக்கும் கைங்கரியத்திலும் ஈடுபட்டுவருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்பாகத் தமிழகத்திற்குக்கொண்டு சென்று விடுகின்றோம் என்று மக்களிடம் கூறி 'தரகு' வேலை பார்த்துப் பெருந்தொகைப் பணத்தை சுளையாகப் பிடுங்கும் ஏமாற்றுப் பேர்வழிகள் குறித்து மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் என்று கேட்கப்பட்டிருக்கிறது.

சமீபத்தில் திருக்கடலூரிலிருந்து மன்னார் வந்த 4 குடும்பங்களைச் சேர்ந்த 11 பேரிடம் தமிழகத்தில் பாதுகாப்பாக இறக்கிவிடுகின்றோம், என்று கூறி அவர்களிடமிருந்து 45ஆயிரம் ரூபா பணத்தையும் பெற்றுக்கொண்ட சிலர் அவர்களைப் படகுகளில் ஏற்றிச்சென்று தலைமன்னார் பழைய பாலத்தடியில் இறக்கிவிட்டுச் சென்றிருக்கின்றனர்.

தற்போது இவர்கள் தமிழகத்துக்கும் செல்லமுடியாமல் திருக்கடலூருக்கும் திரும்ப முடியாமல் அங்கேயே தங்கியிருக்கின்றனர் என்று கூறப்படுகிறது. இவர்களை மன்னார் சகவாழ்வு நிறுவனத்தினர் மற்றும் யு.என்.எச்.சி.ஆர்.பிரதிநிதிகள் ஆகியோர் சந்தித்து உரையாடியுள்ளனர்.

இதுபோன்ற ஏமாற்றுச் சம்பவங்கள் இனியும் இடம்பெறாமல் இருப்பதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அகதிகளுக்கான ஐ.நா தூதரகப் பிரதி நிதிகள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர். (க)

# தமிழகம் நோக்கிச் சென்ற படகு நடுக்கடலில் பழுது!

## அகதிகளை சிங்கள மீனவர்கள் காப்பாற்றினர்

சிலாபம் மே.23

மன்னாரிலிருந்து இராமேஸ்வரம் நோக்கி கடந்த வெள்ளிக்கிழமை 20 அகதிகளை ஏற்றிச் சென்ற படகு நேற்று முன்தினம் நடுக் கடலில் பழுதானது.

எனினும், அந்த நேரத்தில் தற்செயலாக அப்பகுதிக்கு வந்த சிலாபம் பகுதியைச் சேர்ந்த சிங்கள மீனவர்கள் இருபது அகதிகளையும் தமது 'ட்ரோலர்' படகுகளில் காப்பாற்றிக் கரைசேர்த்தனர்.

இவர்கள் அனைவரும் திருகோணமலையைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. வெள்ளியன்று 11 மணியளவில் இலங்கை - இந்திய கடல் எல்லைப் பகுதியில் - சர்வதேச கடற்பரப்புக்குச் சமீபமாக - சென்றுகொண்டிருந்தபோது சீரற்ற கால நிலை காரணமாக இவர்களது படகு விபத்துக்குள்ளானது.

படகுக்குள் நீர்புக ஆரம்பித்ததும் அதற்குள் இருந்த அனைவரும் உதவிகேட்டு - தங்களைக் காப்பாற்றுமாறு கூக்குரலிட்டு - கத்தியிருக்கின்றனர். அந்த நேரத்தில் அப்பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்த சிலாபம் பகுதி சிங்கள மீனவர்கள் அவலக் குரலைக் கேட்டு குரல் வந்த திசை நோக்கித் தமது படகைச் செலுத்திச் சென்றிருக்கின்றனர். குறித்த அகதிகள் படகுக்கு அருகில் சென்றதும் நிலைமையைப் புரிந்துகொண்ட சிலாபம் பகுதி மீனவர்கள் உடனடியாக அனை வரையும் தமது 'ட்ரோலரில்' ஏற்றிக்கொண்டனர்.

அகதிகளின் பொருள்களில் கணிசமானவற்றையும் ஏற்றிக்கொண்டு அகதிகள் வந்த படகையும் கட்டி இழுத்துக்கொண்டு சிலாபம் கரையை நோக்கி வந்தனர். எனினும், கயிற்றினால் கட்டி இழுத்துவரப்பட்ட படகு இடை வழியில் அறுந்து போய்விட்டது என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

இந்த 20 பேரில் இரு குழந்தைகள் மற்றும் சிறுவர்களும் அடங்குகின்றனர். இவர்கள் அனைவரும் மீனவர்களால் சிலாபம் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். பின்னர் இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர். அவர்களை விளக்க மறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

# மன்னாரில் இளைஞர்கள் மீது சூடு!

மன்னார் உயிலங்குளம் சந்தியிலிருந்து இலந்தைமோட்டையை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் மீது நேற்று முன்தினம் பகல் 2 மணியளவில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இவர்கள் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது மண்குளம் ரயில் நிலையத்திற்கு அருகில் மறைந்திருந்தவர்களே இவர்கள் மீது துப்பாக்கிச்சூட்டை நடத்தியுள்ளனர்.

இருப்பினும், இவர்கள் மோட்டார் சைக்கிளைப் போட்டுவிட்டு ஓடி உயிர்தப்பினர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து மன்னார்ப் பொலீஸார் விசாரணைகளை நடத்திவருகின்றனர்.

(க)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 09 - 10 - 1927

உதிர்வு 23 - 04 - 2006

### செல்வி சரஸ்வதி கந்தையா

(Retired Public Health Midwife)

நிலையில்லாத வாழ்வினிலே
நீங்காத நினைவுகளைத் தந்துவிட்டு
நிலையான வாழ்வை நாடிச் சென்ற தெய்வமே!
உமது ஆன்மா சாந்தியடைய
நீர் நித்தமும் இறைஞ்சும்
வடகோவை சித்திர வேலாயுதனை
வணங்குகின்றோம் தாயே!

(50328) (24.11.17)

"சரஸ்வதி வாசம்"
கோப்பாய் வடக்கு.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மீள்நியமனம் பெற பிரயத்தனம்

யாழ்ப்பாணம்,மே23

யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சி சேவையில் இருந்து ஓய்வுபெற்ற பலர் மீண்டும் ஒப்பந்த அடிப்படையில் தம்மை சேவையில் இணைத்துக்கொள்ளுமாறு உள்ளூராட்சி ஆணையாளரைக் கோரி வருகின்றனர் என்று கூறப்படுகிறது. கடந்த காலங்களில் சுப்றா தரம் மற்றும் எழுதுநர் தரம் I ஆகியவற்றில் செயலாளர் பதவியில் கடமையாற்றி இளைப்பாறியவர்களில் சிலரே மீள்நியமனம் கேட்டு விண்ணப்பித்துள்ளனர்.

இதேவேளை, தீவகப் பகுதியில் உள்ள இரண்டு பிரதேச சபைகளுக்குப் புதிய செயலாளர்கள் நியமனம் செய்வதற்குப் பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களம் ஆலோசித்து வருவதாக அறியமுடிகிறது. (185)

## மணல் விநியோகம்

வடமராட்சி புனர்வாழ்வு, புனரமைப்பு நிறுவனத்தின் மணல் விநியோகம் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் நடைபெறும் என நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் 09.05.2006, 10.05.2006 ஆகிய திகதியிடப்பட்ட அனுமதிப்பத்திரம் உடையவர்களுக்கும் மணல் விநியோகம் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாநகர நிர்வாகம் கைமாற்ற முயற்சி

கொழும்பு, ஐக்கிய தேசியக் கட்சியின் கோட்டைதான் என்பதைத் தெளிவாக வெளிப்படுத்திவிட்டோம். இனிக் கொழும்பு மாநகரசபையில் ஐ.தே.கவின் நிர்வாகத்தை முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கான செயற்பாட்டை ஆரம்பிப்போம்.

- இவ்வாறு கருத்துத் தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாநகரசபைத் தேர்தலுக்கான முதன்மை வேட்பாளர் சிறிசேனகுரே. தேர்தலில் ஐ.தே.க. ஆதரவுடைய சுயேச்சைக்குழு வெற்றி பெற்றதையடுத்து கருத்துவெளியிட்ட சிறிசேன குரே மேலும் கூறியதாவது:-

நாம் மேற்கொள்ளவுள்ள அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடி வருகிறோம். கொழும்பு மாநகர நிர்வாகத்தைக் கொண்டு நடத்துவது பற்றி ஏற்கனவே, நாம் சட்ட நுணுக்கங்களை ஆராய்ந்து தீர்மானித்திருக்கிறோம். எப்படியும் நாம் இது விடயத்தில் சில சவால்களை எதிர்நோக்க வேண்டிவரும். ஆனால், அவற்றை நாம் முறியடிப்போம்- என்றார் சிறிசேன குரே.

கொழும்பு மாநகரசபைக்கான தேர்தலில் ஐ.தே.கட்சி தாக்கல் செய்த வேட்பு மனு நிராகரிக்கப்பட்ட நிலையில், அக்கட்சி ஆதரித்த சுயேட்சைக் குழு வெற்றி பெற்றிருக்கின்றது. அந்த சுயேச்சைக்குழு உறுப்பினர்களிடமிருந்து நிர்வாக அதிகாரத்தை ஐ.தே.கட்சியினர் பெற்றுக்கொள்வதில் பல சிக்கல்கள், சட்ட நெருக்கடிகள் இருக்கும் என விடயமறிந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.(க)

ஓம் ஸ்ரீராமஜெயம்

யாழ்ப்பாணம் - வண்ணை
ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

ஏகாதசி உற்சவம் 23.05.2006
நிகழும் விய வருடம் வைகாசி மாதம் 9ஆம் திகதி
காலை 10.30 மணிக்கு
ஏகாதசி உற்சவம் நடைபெறும்.
அடியார்கள் இவ்வுற்சவத்தில் பங்குபற்றி
ஸ்ரீமந் நாராயணன் அருள்பெற்று
ஸ்ரீமகாலக்ஷ்மி விலாச சம்பன்னாக வாழ்வீர்களாக.

- ஆதீன மகாசபை.

(சி/48976) (24.21.11.17)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
செல்வி அருந்ததி துரைராஜாவின் அன்புத் தந்தை

### கந்தையா துரைராஜா

அவர்களின் மறைவையொட்டி 23.05.2006 செவ்வாய்க்கிழமை நடைபெற இருக்கும் பிரார்த்தனையின் போது அன்னாரின் ஆத்ம சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் செலுத்துகின்றோம்

ஆசிரியர் கழகம்
(சி/48976) (24.21.11.17) கொக்குவில் இந்துக்கல்லூரி

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பருத்தித்துறை சென்.தோமஸ் வீதியைப்
பிறப்பிடமாகவும் கட்டைக்காட்டை
வதிவிடமாகவும் தற்போது 3ஆம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறையை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

### அருளப்பு செபஸ்தியாம்பிள்ளை

அவர்களின் 31ஆம் நாள் நினைவு தினத்தையொட்டி இன்று (23.05.2006) செவ்வாய்க்கிழமை புனித அந்தோனியார் ஆலயத்தில் மாலை 5 மணிக்கு நடைபெறும் நினைவுத் திருப்பலியிலும் 25.05.2006 அன்று எமது இல்லத்தில் நடைபெறும் 31 ஆம் நாள் நிகழ்விலும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மனைவி: செ.அன்னமலர்,

பிள்ளைகள்:
கலா குடும்பம் (வவுனியா), ஒலியா குடும்பம் (லண்டன்),
ஜேனோவா (லண்டன்), ஜெயா குடும்பம் (கனடா),
லெற்றிசியா குடும்பம் (பருத்தித்துறை), ஜெரோன்ராஜ் (மகன்),
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

3ஆம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.

(50336)(21.11.17)

## துயர் பகிர்வு நன்றி நவிலல்



### சின்னத்துரை முரளி

கடந்த 17.05.2006 புதன்கிழமை இலங்கை யாழ்ப்பாணத்தில் சிவபதம் அடைந்த எனது அன்புக் கணவர் சின்னத்துரை முரளியின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியோருக்கும் எங்கள் குடும்பத்துடன் இணைந்து துயர்பகிர்ந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசியூடாக இரங்கல் செய்தி தெரிவித்தவர்களுக்கும், சுவிற்சர்லாந்து நாட்டிலுள்ள நண்பர்களும் உறவினர்களும் இணைந்து 'லுட்சார்ன்' மாநகரில் துயர் பகிர்வு நிகழ்வை நடத்தியமைக்காகவும் அனைவருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

'லக்ஷ்மி' வாசம்'
மூளாய் மத்தி, சுழிபுரம்,
யாழ்ப்பாணம்.

திருமதி முரளி சத்தியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிலங்கை இலக்குகளைத் தாக்குவது புலிகளுக்கு சிக்கலான விடயம் அல்ல!

*கிளிநொச்சியில் நீதித்துறை செயற்பாட்டாளர்களுக்கான சமகால அரசியல் கருத்தரங்கு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. நீதித்துறைப் பொறுப்பாளர் செ.வ.தமிழேந்தி நீண்ட உரை ஒன்றை ஆற்றினார். அந்த உரையின் இறுதிப் பகுதி இன்று பிரசுரமாகின்றது.*

சிங்கள பகுதிகளைத் தாக்குவது ஒன்றும் விடுதலைப் புலிகளுக்கு சிக்கலான விடயம் அல்ல. எங்கள் தேசியத் தலைவரை ஒரு பயங்கரவாதி என்கிறார்கள்.

என்ன காரணத்துக்காக சொல்கிறார்கள்? பிரபாகரன் செய்த குற்றம் என்ன? தமிழர் இந்த மண்ணில் அழிந்துபோகாமல் இருப்பதற்காகப் பிரபாகரன் போராடுவதுதான் அவர் செய்த குற்றம் - தமிழர் தாய் மணணை மீட்டெடுக்க போராடுவதுதான் பிரபாகரன் செய்கிற குற்றம். அது குற்றமாகுமேயானால் அந்தக் குற்றத்தை - அந்தப் பயங்கரவாதச் செயலைக் கோடி முறையும் எல்லாத் தமிழர்களும் செய்ய அணியமாக வேண்டும்.

அதைத்தான் இந்த இலங்கை விரும்புமேயானால் வேறுவழியில்லை. எப்படியாவது விடுதலைப் புலிகளின் தலைவரை அழித்துவிடலாம் என்று சிங்கள அரசு முயற்சித்து வருகிறது. அதற்குத்தான் ஊடுருவல் நடத்துகிறார்கள். உங்கள் தலைவர் மீது அளப்பரிய பற்று வைத்திருக்கிறவர்கள் நீங்கள் - உயிரைவிட நீங்கள் அவரை மதிக்கிறீர்கள் - அவர் இல்லையெனில் கண்டிப்பாகத் தமிழினம் இல்லை. உலகம் முழுவதும் 8 கோடித் தமிழர்கள் வாழ்வதாகச் சொல்லுகிறார்கள். இந்தியாவிலும் 6 கோடித் தமிழர்கள் அடிமைகளாக வாழ்கின்றனர்.

தங்களைத் தமிழர் என்று சொல்ல முடியாத நிலை உள்ளது. எந்தப் பதிவிலும் இந்தியர் என்றுதான் பதிய வேண்டும். தமிழர் என்ற ஒரு இனம் தன் இன அடையாளத்தை - இருப்பை வெளிப்படுத்தும் ஒரே இடம் இந்த மண். அதனால்தான் எங்கள் தலைவரை இல்லாது ஒழித்துவிட்டால் உலகில் தமிழினம் என்பதையே இல்லாது செய்துவிடலாம் என்று கருதுகிறார்கள். தமிழர்கள் இங்கே விடுதலையடைந்து விட்டால் தமிழ் நாட்டிலும் அந்தச் சிக்கல் உருவாகுமோ என்று இந்தியா அஞ்சுகிறது. இந்திய நடுவன் அரசு அஞ்சுவது போல் எதுவும் நடக்காது.

எங்கள் தலைவரது வாழ்வுதான் தமிழரது வாழ்வு. எங்களிடம் மானம் ஒன்றுதான் உள்ளது. அந்த மானத்தை விட்டுவிடப் போகிறோமா என்று முடிவு செய்ய வேண்டும். தமிழர் இந்த உலகத்துக்கு நாகரிகம் - பண்பாட்டை கற்றுத்தந்தவர்கள். நாம் பெருமைப்பட வேண்டும். வீரர்கள் நிறைந்த இனம் என்று இன்று பொருள்படும்படியான நிலைமையைத் தலைவர் உயர்த்தியிருக்கிறார். தமிழ் மொழி உலகின் முதலாவது மொழி. தமிழர்தான் உலகில் முதலில் தோன்றியவர்கள் என்று ரசியாவின் ஆய்வாளர் சொல்லியிருக்கிறார். இந்து மாக்கடல் மர்மங்கள் என்ற பெயரில் அவரது நூல் தமிழில் வெளிவந்துள்ளது. நாங்கள் தொன்மை மிக்க நாகரிகத்தையும் உலகத்து பண்பாட்டையும் கொடுத்தவர்கள். உலகில் தமிழ், சமஸ்கிருதம், கீப்ரூ, லத்தீன், கிரீக், சீனம் ஆகியவை மூத்த மொழிகளாக சொல்லப்படுகின்றன. தற்போது லத்தீனும் சமஸ்கிருதமும் செத்த மொழிகள் என்று சொல்லப்படுகின்றன. இந்த மொழிகளில் ஒன்று கீப்ரு. யேசுநாதரின் மொழி எபிரேயம். அது அழிந்த மொழி.

உலகம் முழுவதும் ஒன்றரைக் கோடி யூதர்களே இருக்கின்றனர். ஜெர்மனியர்கள் அந்த யூதர்களை படாதபாடுபடுத்தினர். யூதர்களைக் கொண்டு புதைகுழிகளைத் தோண்டி அதற்குள் யூதர்களையே புதைத்தார்கள். இத்தனை கொடுமைகளுக்கும இடையே தங்களது தேசத்தை அவர்கள் உருவாக்கினார்கள். இஸ்ரேல் உருவாக்கப்பட்டது. இஸ்ரேலை எதுவும் செய்ய முடியாத படி இன்று வளர்ந்துள்ளனர். மொத்தம் இஸ்ரேலிய மக்கள் தொகை 50 இலட்சம் பேர்தான்.

உலகில் பல்வேறு நாடுகளில் 100 கோடி முஸ்லிம்கள் இருக்கலாம். இத்தனை கோடி முஸ்லிம்கள் இருந்தும் யூதர்களை எதுவும் செய்ய முடியவில்லை. ஏனெனில் அவர்களது இனப்பற்று காரணம். தங்களது தேசத்துக்காக எதையும் செய்யத் தயார் என்று அவர்கள் இருப்பதால் அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. யூதர்கள் ஒன்றரைக் கோடி பேரும் யூதர் என்ற எண்ணத்தோடு யூத தேசியம் - இஸ்ரேல் என்ற எண்ணத்தோடு உள்ளனர். அமெரிக்கா யூதர்களைப் பக்கபலமாக பாதுகாத்து வருகிறது. அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் மட்டும் 20 இலட்சம் யூதர்கள் வாழ்கின்றனர்.

அமெரிக்காவினது அரசியலை தீர்மானிக்கிற - பொருளாதாரத்தை தீர்மானிக்கிற மிகப்பெரும் சக்தியாக யூதர்கள் உள்ளனர். அவர்களை விஞ்சி அமெரிக்காவால் எதுவும் செய்ய முடியாது.

எந்த அமெரிக்கக் குடியரசுத் தலைவரும் யூதர்களுக்கு மாறாக எதுவும் செய்ய முடியாது. அப்படிச் செய்தால் அடுத்த முறை ஆட்சிக்கு வரமுடியாது. யூதர்கள் தங்கள் தேசத்தை நேசிக்கிறார்கள் - இஸ்ரேலுக்காக எல்லாவற்றையும் நேசிக்கிறார்கள் - தங்கள் தேசத்தின் நினைவுகளோடு- தேசத்தைக் கட்டியெழுப்பும் நினைவோடு உறங்குகிறார்கள் - வாழ்கிறார்கள்.

வெளிநாடுகளில் உள்ள ஒரு தொகை தமிழர்கள் தங்கள் தேசத்தை நேசிக்கிறவர்களாக இருகின்றனர். அதற்காக உழைத்துக் கொண்டிருக்கின்றனர். வன்னியை இரண்டாகப் பிரித்து தொடங்கப்பட்ட ஜெயசிக்குறு நடவடிக்கையை முறியடித்த வெற்றிகளுக்குப் பின்னால் வெளிநாட்டுத் தமிழர்கள் இருக்கின்றனர் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அந்தத் தமிழர்கள் அளித்த நிதியிலிருந்து வாங்கப்பட்ட போர்க்கருவிகள்தான் அந்த வெற்றிக்குத் துணையாக இருந்தன.



ஆனையிறவு தளம் 350 ஆண்டுகளாக மாற்றாரின் கையில் இருந்தது. யாழ்ப்பாணத்தைப் போர்த்துகேயர் கைப்பற்றியபோது வன்னி தனித்து இயங்கியது. வன்னியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு யாரும் ஊடுருவிவிடக் கூடாது என்பதற்காக ஆனையிறவில் தடை முகாம் அமைத்தனர். அதன் பின்னர் அந்த முகாம் ஒல்லாந்தரால் பேணப்பட்டது. பின்னர் யாழை பிரிட்டிசார் கைப்பற்றினர். பண்டாரவன்னியனையும் தோற்கடித்து வன்னியைக் கைப்பற்றினர்.

அதற்குப் பின்னர் சிங்கள அரசாங்கத்தின் கைக்கு ஆனையிறவு சென்றது. ஆனையிறவை நாங்கள் மீட்டெடுத்ததற்குப் பின்னால் அந்த மாபெரும் வரலாற்றுக்குப் பின்னால் தேசப்பற்றுள்ள - வெளிநாட்டுத் தமிழர்கள்தான் உள்ளனர் என்பதை மறுக்கிறவர் யாரும் இல்லை.

ஆனால் யூதர்களைப்போல் நாம் முழுவதுமாக இல்லை. அதுதான் நாம் முன்னேறத் தடை. நாம் ஒன்றுபடவேண்டிய சூழல் வந்துள்ளது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்றார் தமிழேந்தி.

---

## வீதி புனரமைப்புப் பணி பூர்த்திசெய்யப்படாததால் பயணிகள் பெரும் சிரமம்

ஒட்டுசுட்டான்,மே23

ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு வீதியின் இடையிடையே புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படாமையால் போக்குவரத்தில் பெரும் சிரமங்கள் எதிர்நோக்கப்படுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி வீதி அண்மையில் புனரமைப்புச்செய்யப்பட்டது. ஆயினும், வீதியில் இடையிடையே புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் போக்குவரத்துச் செய்வதில் சிரமங்கள் ஏற்படுகின்றன.

அத்துடன் புனரமைக்கப்படாத பகுதியூடாக வாகனங்கள் போக்குவரத்துச் செய்யும் போது புழுதி மேற்கிளம்புவதால் தொற்றுநோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் - பயணிகள் கவலை தெரிவித்தனர்.(341)

**கனகாம்பிகைக் குளத்தின் ஆற்று ஒதுக்கீட்டுப் பகுதியில்**

## அத்துமீறி காணி பிடித்துள்ளவர்களை காணிகளை விடுவிக்கக் கோரிக்கை

வட்டக்கச்சி,மே23

கிளிநொச்சி கனகாம்பிகைக் குளத்தின் ஆற்று ஒதுக்கீட்டு பகுதிகளில் அத்துமீறிக் காணிகளை ஆக்கிரமித்துள்ளவர்களை உடனடியாகக் காணிகளை விடுவிக்குமாறு தமிழீழ நிர்வாகசேவையினர் கோரியுள்ளனர்.

ஆற்றின் கிழக்குப் பக்கமும் மேற்குப் பக்கமும் உள்ள ஆற்று ஒதுக்கீட்டுக் காணியையும் மேய்ச்சல் தரைக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட காணியையும் பலர் அத்துமீறி ஆக்கிரமித்துள்ளனர்.

இவ்வாறு காணிகளை ஆக்கிரமித்துள்ளவர்களுக்கு எக்காரணம் கொண்டும் காணி வழங்கப்படமாட்டாது என்றும் -

இந்தப் பகுதியில் காணி பிடித்துள்ளவர்கள் காணிகளில் தம்மால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப்பணிகளை அப்புறப்படுத்தவேண்டுமென்றும் - நிர்வாக சேவையினர் தெரிவித்துள்ளனர். தவறின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காணி தேவையானோர் தமிழீழ நிர்வா சேவைப் பணிமனையுடன் தொடர்பு கொண்டு காணியைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் - நிர்வாக சேவையினர் அறிவித்துள்ளனர். (405)

## பூநகரி விவசாயிகளுக்கு பயற்றம்விதை விநியோகம்

உலக உணவு ஸ்தாபனத்தின் நிதியுதவியுடன் சின்னப் பல்லவராயன்கட்டில் 52 பயனாளிகளுக்கு விதை, தானியங்களை வழங்கியுள்ளதாகவும் - கடந்த 18ஆம் திகதி 32 பயனாளிகளுக்கு கௌபி விதைகளும் - 20 பயனாளிகளுக்குப் பயற்றம் விதைகளும் - வழங்கப்பட்டன எனவும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பூநகரிப் பிரதேச இணைப்பாளர் செ.கருணாகரன் தெரிவித்தார். (403)

## திருநகர் மழலைகள் பூங்கா சிறாரின் விளையாட்டுவிழா

கிளிநொச்சி,மே23

திருநகர் மலரவன் மழலைகள் அறிவியற் பூங்காச் சிறார்களின் அறிவியல் விளையாட்டு விழா எதிர்வரும் 6ஆம் திகதி அறிவியற் பூங்கா மைதானத்தில் நடைபெறவுள்ளது.

3 முதல் 12 வரையான வயதுடைய சிறார்கள் பங்குபற்றும் அறிவியல்சார் உள்ளக, வெளியக விளையாட்டுக்களே நடைபெறவுள்ளன.

## மன்னார் பாடசாலையை தரம் உயர்த்தக் கோரிக்கை

பரந்தன்,மே23

மன்னார் சாந்திபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையைத் தரமுயர்த்துமாறு பிரதேச மக்கள் கோரியுள்ளனர்.

மேற்படி பாடசாலையில் நீண்டகாலமாக தரம் 5 வரையிலான வகுப்புகளே நடைபெற்றுவருகின்றன.

இந்நிலையில், மேற்படி பாடசாலையின் தரத்தை உயர்த்துவதுடன், தரம்5 இற்கு மேற்பட்ட வகுப்புகளையும் ஆரம்பித்து நடத்துமாறும் -

ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் கட்டடப் பற்றாக்குறை போன்றவற்றை நிவர்த்தி செய்யுமாறும் - பிரதேச மக்கள் மன்னார் கல்வித் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (352)

## பூநகரி சிகை அலங்கரிப்பு நிலையங்களில் சுகாதாரம் பேணுவது குறித்து அறிவுறுத்து

பூநகரிப் பிரதேசத்தில் இயங்கும் சிகை அலங்கரிப்பு நிலையங்களில் கடைப்பிடிக்கப்படவேண்டிய சுகாதார நடைமுறைகள் குறித்து நிலைய உரிமையாளர்களுக்கான அறிவுறுத்தல்களைத் தமிழீழ சுகாதார சேவையினர் விடுத்துள்ளனர்.

அந்த அறிவுறுத்தல்கள் வருமாறு:-

- சுகாதாரம் பேணும் மேலங்கிகளை அணிந்திருத்தல் வேண்டும்.
- தனிநபர் ஒருவருக்கு ஒரு சவர அலகு பயன்படுத்தப்படல் வேண்டும்.
- துருப்பிடிக்காத உபகரணங்கள் பயன்படுத்தப்படல் வேண்டும்.
- உபகரணங்கள் தொற்றுநீக்கம் செய்யப்படல் வேண்டும் (சவலோன், டெற்றோல் பயன்படுத்தி).
- முகச் சவரத்திற்கு கிறீம் பயன்படுத்தப்படல் வேண்டும்.
- முடிகள் சேகரிக்கப்பட்டு பாதுகாப்பான முறையில் அகற்றப்படல் வேண்டும்.
- தூய்மையான உடைகள் கையாளப்படல் வேண்டும்.
- நிலையச் சுற்றாடல் வெளிச்சம், காற்றோட்ட வசதியுடன் இருக்கவேண்டும்.
- புகைத்தல், மது போதையுடன் தொழிலில் ஈடுபடக்கூடாது.
- தனிநபர் சுகாதாரம் பேணப்படல் வேண்டும்.

இந்த நடைமுறைகளை மீறுவோர் மீது சுகாதாரச் சட்டத்திற்கு அமைவாகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தமிழீழ சுகாதார சேவைகளின் பூநகரிப் பிரதேச இணைப்பாளர் அரவிந்தன் தெரிவித்துள்ளார். (403)

## ஓமந்தை சாவடி அடிக்கடி மூடப்படுவதையடுத்து வவுனியா வடக்கு அலுவலகங்களில் நெருக்கடி

### அரச ஊழியரின் வரவிலும் பெரும் வீழ்ச்சி

புளியங்குளம்,மே23

அண்மைக் காலமாக ஏ-9 பிரதான வீதி அடிக்கடி மூடப்படுவதையடுத்து வவுனியா நகரப் பகுதியிலிருந்து வவுனியா வடக்குப் பிரதேசத்திற்கு கடமை நிமித்தம் வருகைதரும் அரச ஊழியர்களின் வரவு மிகவும் குறைந்துள்ளது.

அண்மைக்காலமாக சிறுசிறு அசம்பாவிதங்களைக் காரணங்காட்டி ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடி திடீர் திடீரென மூடப்படுகின்றது.

இதனால், வவுனியா நகரப்பகுதியிலிருந்து வவுனியா வடக்கிற்கு - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு - நாளாந்தம் கடமை நிமித்தம் வருகை தரும் அரச ஊழியர்களின் வரவு மிகவும் குறைந்துள்ளது. இதனால், பல அரச பணிகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன என்று திணைக்களத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய நிலைமைகளால் குறிப்பிட்ட திணைக்களங்களுக்கு அலுவல்களை நிறைவேற்றுவதற்கெனச் செல்லும் பொதுமக்கள் ஏமாற்றத்துடன் வீடுதிரும்ப நேரிடுவதாகவும் - கூறப்பட்டது. (355)

## முன்னாள் போராளிகளுக்கான அரசியல் கருத்தரங்கு

வட்டக்கச்சி,மே23

வட்டக்கச்சிப் பிரதேச முன்னாள் போராளிகளுக்கான சமகால அரசியல் கருத்தரங்கு கடந்த 14ஆம் திகதி நடைபெற்றது.

வட்டக்கச்சிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ச.திருமாறன் தலைமையில் இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை பிரதான மண்டபத்தில் முற்பகல் 9 மணிக்குக் கருத்தரங்கு ஆரம்பமானது.

இக்கருத்தரங்கில் பிரதேசப் பொறுப்பாளர் ச.திருமாறன் முன்னர் போராட்டத்திலிருந்து விலகியிருந்து தற்போது மீண்டும் போராட்டத்தில் இணைந்துள்ள அரசியல் போராளி சுரேஸ் மற்றும் அரசியல் போராளிகள் சமகால அரசியல் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர்.

கருத்தரங்கின் முடிவில் முன்னாள் போராளிகள் தாம் போராட்டத்திற்கான பங்களிப்பை வழங்குவதாக ஒருமித்த தீர்மானம் எடுத்தனர். (405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

வீட்டுப்பாவனைக்குரிய புதிய சோக்கேஸ் ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு: சி.தர்மகுமார், நாவலடி வீதி (பத்திரகாளி கோயிலடி), திருநெல்வேலி. (50395)

## வீடு வாடகைக்கு

கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோயிலடியில் மேல்மாடி வீடு உடன் வாடகைக்கு உண்டு. தொடர்பு: T.P.: 222 8159; 0776913014 (50397)

## தேவை

புறொயிலர் கோழிகள் தேவை. தொடர்பு: வீனஸ் பாம், திருநெல்வேலிச் சந்தி, நல்லூர் பிரதேச சபை முன்பாக. T.P.: 021 4590484 (50394)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

O/L, A/L, B.A. மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள் கதைக்க, இலக்கணம், வினாவிடை வகுப்புகள். BY: விக்னேஸ்வரன், ஆச்சாரி, 426 (302) K.K.S. வீதி, யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை.

"THE ROYAL IS THE BEST" (சி/49353)

## ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம் இசுசு என்ஜின் விற்பனை

எம்மிடம் நல்ல நிலையில் 27-இசுசு என்ஜின் கியர் பொக்சுடன் விற்பனைக்கு உண்டு.

தொ.இல. 021 222 6160 (சி/49353) (32-11-17)

## யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் கவனத்துக்கு

வலய மட்ட உடற்பயிற்சிப் போட்டி இன்று 23.05.2006இல் நடைபெறவிருப்பதால் பங்குபற்றும் மாணவிகள் காலை 9 மணிக்கு பாடசாலைக்கு தவறாது சமுகமளிக்கவும்.

(50456)(32-11-17) -அதிபர்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் விஞ்ஞான பீடம்

விஞ்ஞானபீட மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் 29-05-2006 திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பமாகும். 08-05-2006 நடைபெறுமென அறிவிக்கப்பட்ட கற்றலின் போது மதிப்பீடு செய்யும் பரீட்சைகள் 29-05-2006 திங்கட்கிழமை இடம்பெறும்.

(சி/49359) (26-32-11-17) -பதிவாளர்.

## UNIVERSITY OF JAFFNA SRILANKA VACANCIES

The closing date for applications for the following posts advertised on 2006-04-17 has been extended up to 2nd June 2006

1. Director of Physical Education
2. Computer Applications Assistant, Grade III
3. Record Keeper, Grade II
4. Stenographer (English) Grade II
5. Library Assistant, Grade III

(C/49355)

## கரவெட்டியில் உதவிக்கொடுப்பனவு

கரவெட்டி, மே23

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோர் கொடுப்பனவை இம்மாதம் 25ஆம் திகதிக்கு முன்பாக பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுசன உதவிப் பணம், காச நோய், புற்றுநோய் போன்றவற்றுக்கான அரச உதவிக் கொடுப்பனவுகளே இம் மாதம் 25ஆம் திகதிக்குள் வழங்கப்படவுள்ளன. (70)

# வாழ்த்துகின்றோம்



குளமங்கால் மல்லாகம் மண்ணின் மைந்தன் சிற்பஜோதி லயன்ஸ் **A.V. ஆனந்தன்** அவர்களுக்கு 22.05.2006 அன்று கொழும்பு ஜோன், டி.சில்வா அரங்கில் "கலாபூஷணம்" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமையிட்டு மகிழ்ச்சி அடைவதோடு, மேலும் பல விருதுகள் பெற இறைவனை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:

திரு.திருமதி அந்தோனிப்பிள்ளை குடும்பத்தினர்,
திரு.திருமதி எமில்ஜேம்ஸ் குடும்பத்தினர்,
திரு.திருமதி தேவதாஸ் குடும்பத்தினர்,
திரு.திருமதி கிறிஸ்ரோப்பர் குடும்பத்தினர்.

(50455) (39-32-11-17)

# அறிவித்தல்

20.04.2006 ஆம் திகதி யூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களுக்கான சிவப்பு நாட்டரிசி கொள்வனவு செய்வதற்கான கேள்வி அறிவித்தல் தொடர்பாக,

2006 யூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களுக்கான உலர் உணவு விநியோகத்தின் பொருட்டு சிவப்புநாட்டரிசி கொள்வனவு செய்வதற்கான கேள்வி விண்ணப்பம் 10.05.2006 ஆம் திகதியிலிருந்து 30.05.2006 ஆம் திகதி பி.ப.2 மணிவரை காலநீடிப்புச் செய்யப்பட்டுள்ளது. அன்றைய தினம் பி.ப.3 மணிக்கு கேள்வி திறக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**க.கணேஷ்,**
**அரசாங்க அதிபர்,**
**யாழ்.மாவட்டம்.** (சி/49362) (26-32-11-17)

# டோகா - கட்டார் உடனடி வேலைவாய்ப்பு

| தொழில்கள் | தொகை |
|---|---|
| மேசன் | 20 |
| தச்சுவேலை | 05 |
| போர்மன் | 05 |
| லேபர் | 10 |
| எலக்ரிசன் | 05 |
| பெயின்ரர் | 05 |

தொடர்பு: 0773525742
கரன் 009745204257 (டோகா)

**K.Sathees Travel Agency**
K.Sathees,
Uduvil Road, Manipay,
Jaffna.

(சி/49362) (21-32-11-17)

# கண்ணீர் அஞ்சலி

கைதடி அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலையில் தாதி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **அ. படைவீரசிங்கத்தின்** அன்புத் தாய்

## திருமதி அருணாசலம் வள்ளிப்பிள்ளை

அவர்கள் 22.05.2006 அன்று இயற்கை எய்தியதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலை, கைதடி. (50457)(22-32-11-17)

வைத்திய பொறுப்பதிகாரியும் மற்றும் வைத்திய சமூகத்தினரும்.

# கண்ணீர் அஞ்சலி

எமது வலயக் கல்வி அலுவலகத்தில் கடமையாற்றும் ஆசிரிய ஆலோசகர் திரு.சி.குகநாதன் அவர்களின் தந்தை

## வே.கிருஸ்ணபிள்ளை

அவர்களின் மறைவு குறித்து எமது கண்ணீர் அஞ்சலியை சாணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம், வலயக்கல்வி அலுவலகம், [illegible]

(C/49356)(26.32.11.17)

# மூன்றாவது பிறந்தநாள் வாழ்த்து




கொழும்புத்துறை **கி.கிருஷ்ணபாவன்** வேலணை **அன்பரசி** தம்பதியரின் **செல்வப் புதல்வி கஜனி** (கனி) தனது மூன்றாவது பிறந்தநாளை இன்று (23.05.2006) செவ்வாய்க்கிழமை இல.73, இலந்தைக்குளம் வீதி, அரியாலையில் உள்ள தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பம்மா, கனடா பெரியமாமா, பெரியத்தை, சின்னமாமா, சின்னத்தை, மச்சான் தரணிதன், சித்தப்பா, சித்தி, அண்ணன் பானுஜன் மற்றும் உற்றார், உறவினர்கள் பிரப்பன்குளம் நாச்சியம்மன் அருளால் பல்கலையும் பெற்று சகல சௌபாக்கியங்களுடன் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.

வேலணை கிழக்கு, வேலணை - 4.

DR.ஐ.பாலசுப்பிரமணியம் (அம்மப்பா).

(50398) (39-32-11-17)

# தேவை

எமது நிறுவனத்திற்கு கணனி இயக்குநராக பணிபுரிவதற்கு அனுபவமுள்ள பெண் ஒருவரும் அலுவலக உதவியாளராக பணிபுரிவதற்கு ஆண் ஒருவரும் உடன் தேவைப்படுகின்றனர். தகுதியுடையோர் நாளை (24.05.2006) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு சான்றிதழ்களுடன் சமுகம் தரவும்.

**இராசா டீசல் இன்ஜினியறிங்,**
*180, பருத்தித்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(சி/49354)(32-11-17)

# வகுப்புகள் ஆரம்பம்

## யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை

மாணவர் கல்வியின் இழப்புக் கருதி பாடசாலையில் மேலதிக செயற்பாடாக ஆசிரியர்களின் முழுமையான ஒத்துழைப்புடன் தரம் 1-4 வரையான சகல வகுப்புகளும் 2006.05.22ஆம் திகதி தொடக்கம் 2006.05.31 வரை (காலை 9 மணி முதல் பி.ப. 1 மணிவரை) நடைபெறவுள்ளது. மாணவர்கள் பாடசாலைச் சீருடையுடன் வருகை தரவும்.

(சி/49358)(32-11-17) **அதிபர்.**

ஓம்

# நியந்த்ரீ

2005ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு முதல்முறையாக தோற்றி சித்தியடைந்த அந்தண மாணவர்கள் தங்கள் பெயர், விலாசம் மற்றும் பெறுபேறுகளை உறுதிப்படுத்திய விவரங்களை 01.06.2006இற்கு முன்னதாக நியந்த்ரீக்கு அனுப்பிவையுங்கள்.

*சிவன் கோயில்,*
*நல்லூர்.* (சி/49361)(32-11-17) **செயலர்.**

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அருணாசலம் வள்ளிப்பிள்ளை

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அருணாசலம் வள்ளிப்பிள்ளை அவர்கள் நேற்று (22.05.2006) திங்கட்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலத்தின் அன்பு மனைவியும் புலேந்திரன் (மலேரியா தடுப்பு உத்தியோகத்தர்), கனகம்மா, அருட்பிரகாசம், சிவபாக்கியம் (கிளிநொச்சி), தில்லைநாயகர் (கண்ணன் ஆலய தர்மகர்த்தா), படைவீரசிங்கம் (தாதி உத்தியோகத்தர் - கைதடி), கந்தசாமி (தேசிய நீர்வடிகாலமைப்புச் சபை உத்தியோகத்தர்), தெய்வேந்திரம் (பிரான்ஸ்), ஷமிலாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை இன்று (23.05.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, குச்சப்பிட்டி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
வாகையடி றோட்,
சாவகச்சேரி. (50458) (24-32-11-17)

தகவல்:
**அ.கந்தசாமி** (மகன்).
**077 9116231, 0777283807**

## திருமதி பாலசுப்பிரமணியம் இராசலக்சுமி (செல்லம்மா)

சாவகச்சேரி, கோயிற்குடியிருப்பைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் இராசலக்சுமி 21-05-2006 அன்று காலமானார்.

அன்னார் சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் தலைவர் சி.சு.பாலசுப்பிரமணியம் (கோபால்) அவர்களின் பாசமிகு மனைவியாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*வினாசித்தம்பி வீதி,*
*சாவகச்சேரி.* (சி/49360)(26-32-11-17)

தகவல்:
**பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IBMS

ONLINE CLASSES
25.05.2006
10.00 AM

விடுமுறைக் காலத்தை பயனுள்ளதாக்குவதற்கு IBMS உடன் இணையுங்கள்

1000/= Only

Fully Practical

MS Office
Desk Top Publishing

Director, IBMS
# 209, Manipay Road,
Vaitheeswara Junction, Jaffna
Tel : 021 222 8232



ராஜா யாழ்ப்பாணம்

விஜய், திரிஷா நடித்த
திருப்பாச்சி

காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்



நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

மனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம்
பீட்டர் றிட்சஸ்சனின்
கிங் - கொங் King Kong
தங்கத் தமிழ் மொழியில்
(பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை)
காட்சி நேரம் : 10.30, 2.30


# இந்து குருமார் ஒன்றிய நிர்வாகிகள் தெரிவு

சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியத்தின் நடப்பு வருடத்துக்கான நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அண்மையில் நடைபெற்ற ஒன்றியத்தின் மகாசபைக் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

தலைவராக சிவப்பிரம்மஸ்ரீ பரமேஸ்வர மனோகர சிவாச்சாரியாரும்

உப தலைவர்களாக சிவப்பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாச நாகேந்திர சிவாச்சாரியார், சிவப்பிரம்மஸ்ரீ நா.யோகீஸ்வர சிவாச்சாரியார் ஆகி யோரும் பொருளாள ராக சிவப்பிரம்மஸ்ரீ நா.பாலஸ்கந்த சிவாச் சாரியாரும், செயலா ளராக பிரம்ம ஸ்ரீ வெ.சுப்பிரமணிய ஐயரும், உபசெயலாள ராக பிரம்மஸ்ரீ கா.சந்திரசேகரசர்மாவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் சபைக்கு 10 உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# நூலகக் கற்கை வகுப்புகள்

இலங்கை நூலகச் சங்கத்தின் யாழ். நிலையத்தினால் நடத்தப்படும் நூலகமும் தகவல் விஞ்ஞானமும் டிப்ளோமா கற்கைநெறிக்கான வகுப்புகள் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் ஆரம்பமாகுமென இலங்கை நூலகர் சங்கத்தின் யாழ். ஒருங்கிணைப்பாளர் அறிவித்துள்ளார்.

# இராணுவத் தலைமையகத்திற்குள் கைத்தொலைபேசி.பாவிக்கத் தடை!

கொழும்பு,மே23

கொழும்பு கொம்பனித் தெருவிலுள்ள இராணுவத் தலைமையகத்திற்குள் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்துவது இன்று முதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

இராணுவத் தலைமையகத்தின் பாதுகாப்பு மறுசீரமைப்பு செயற்பாட்டின் கீழ் இந்தத் தடை நடைமுறைக்கு வந்திருப்பதுடன், இன்று முதல் இராணுவத் தலைமையகத்திற்கு வரும் உயரதிகாரிகள், படை உத்தியோகத்தர்கள் மற்றும் சிவிலியன்கள் எவரும் கையடக்கத் தொலை பேசிகளை உள்ளே பயன்படுத்த முடியாது.

இதேபோல், இராணுவத்தினரது உறவினர்கள் இராணுவ வைத்திய சாலையில் சிகிச்சை பெறுவதும் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடைநிறுத்தப்பட்டி ருக்கிறது. இதனைவிட, இராணுவத் தலைமையகத்தின் முன்னாலுள்ள பிரதான வீதி யில் படையினர் மற்றும் சிவிலியன்கள் நடந்து செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இன்று முதல் சிரேஷ்ட படை அதிகாரிகளின் அனுமதி பெற்ற வாகனங்கள் மட்டுமே இராணுவத் தலைமையக வளவில் நிறுத்துவதற்கு அனுமதிக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (க)


புதிய பிரிவுகள் ஆரம்பம்

- Diploma in Ms Office
- Diploma in Desktop Publishing
- Diploma in Accounting Packages
- Diploma in Internet & E-mail
- Children Program
- ICT (O/L 2007)
- GIT (A/L 2007)

Start On:- 24.05.2006

முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.
பாடசாலை விடுமுறையை மையமாகக் கொண்டது.

C.B Computer Academy
T.P No. 021-4590291 Station Road, Kondavil.


# மகாஜனக் கல்லூரி மாணவர்களுக்கு

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி தரம் 9, 10, 11 மாணவர்களுக்கான விடுமுறைகால வகுப்புகள் 24-05-2006 புதன்கிழமையிலிருந்து சகல பாடங்களும் காலை 8.30 தொடக்கம் 12.30 மணி வரை நடைபெறவிருப்பதால் சகல மாணவர்களும் தவறாது சமுகம் தரவும்.

- அதிபர்.

(50461)(26)


# COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777 222422

யாழ்நகரில் முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்.

## Diploma in Hardware Engineering

உள்நாட் டு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை பெற சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப் பெற.

Course Contents :-
- கணனி தொடர்பான அறிமுகம்
- Operating System - Windows XP & DOS
- கம்யூட்டரின் பாகங்களும் அவற்றின் விளக்கங்களும்
- Mother Board, processor, Ram தொடர்பான விரிவான விளக்கம்.
- கம்யூட்டரை அசெம்பிள் செய்தல்
- அசெம்பிளிங் முடிந்தவுடன் என்ன செய்வது என்பது தொடர்பான விளக்கம். (BIOS Setup)
- Hard Disk ஐ முறைப்படுத்தல்.
- Software, Operating system இன்ஸ்ரோல் செய்தல்.
- கம்யூட்டரில் ஏற்படும் பழுதுகளை சரிபார்த்தல்.

Course Fee :- 2000/=
Free Study Pack & Driver CD
வகுப்புக்கள் ஆரம்பம் :-
29/05/2006 :- 08.30

Hardware பயிற்சி.
- கணனிப் பாகங்களை இனம்காணும் முறை.
- Assembling
- BIOS Configurations (முறைப்படுத்தல்)
- Hard Disk இனை முறைப்படுத்தல் (Partition & Formatting)
- Network தொடர்பான அறிமுகம்
- Trouble Shooting & Maintenance.

Software பயிற்சி.
- Operating System நிறுவும் முறை (Windows 98 & Windows XP)
- Software Install செய்யும் முறை.
- Driver Installation செய்யும் முறை. (Sound Card, Modem, VGA, TV Card, Printer )
- Trouble Shooting (File updating, Copying)

## Diploma in Computerized Accounting

ACCPAC + Quickbooks premier + MYOB

ஆகிய முன்னணி Accounting Software அனைத்தினூடாகவும் கற்பிக்கப்படும்.

Course Contents:-
Introduction to Computer
Manual Accounting
Financial Accounting
Cost Accounting
Taxation (including VAT)
Stock Control
Bank Reconciliation
Budgeting
Fore casting
Business Planing
Internet & e-mail

One week

யாருக்கு:-
கணக்கியல் துறையில் (அரச,தனியார்,NGO) வேலைசெய்துகொண்டிருப்போருக்கும், வெளிநாட்டில் வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருப்போருக்கும், பல்கலைக்கழக, உயர்தொழினுட்ப கல்லூரி மாணவர்களிற்கும், கணக்கியல் துறையில் கற்றுக்கொண்டிருப்போர் அனைவரிற்கும்.

Course Fee:-
~~17500~~ 3500

கற்கைநெறியின் நன்மைகள் :-
- பாடநெறியின் இறுதியில் 100% பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்
- கம்யூட்டரின் உட்தொழினுட்பம் பற்றி பூரண அறிமுகம் செய்வதால் கம்யூட்டர் தொடர்பான முன்னறிவு அவசியமில்லை.
- தராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றது.
- 100% செய்முறைப் பயிற்சிகளுடன் [illegible]

வகுப்புக்கள் ஆரம்பம்:-
29/05/2006


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பரீட்சைகள்

தடைப்பட்ட யாழ்ப்பாண பல்கலைக்கழக பரீட்சைகள் பின்வரும் கால அட்டவணையில் நடைபெறும்.

கலைப்பீடம்

முதலாம் வருட, இரண்டாம் வருட இரண்டாம், அரையாண்டுப் பரீட்சைகள் (மீள் பரீட்சைகள் உட்பட) 29.05.2006 ஆம் திகதி முதல் நடைபெறும்.

நான்காம் வருட மாணவர்கள் ஆய்வுக்கட்டுரையை சமர்ப்பிக்கவேண்டிய இறுதித் திகதி 26.05.2006

இராமநாதன் நுண்கலைப்பீடம்

மூன்றாம்/இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு செய்முறைப் பரீட்சைகள்(நடனம், சங்கீதம், சித்திரமும் வடிவமைப்பும்) 29.05.2006ஆம் திகதி முதல் நடைபெறும்.

மாணவர்கள் தத்தமது துறைத் தலைவர்களை செய்முறைப் பரீட்சைகள் சம்பந்தமாக தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு அறிமுறைப் பரீட்சைகள் 12.06.2006ஆம் திகதி முதல் நடைபெறும்.

நான்காம் வருட மாணவர்கள் ஆய்வுக்கட்டுரையைச் சமர்ப்பிக்கவேண்டிய இறுதித் திகதி 26.05.2006

விஞ்ஞானபீடம் - மீன்பிடியியல் அபிவிருத்தி அலகு

மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் 29.05.2006 ஆம் திகதி முதல் நடைபெறும்.

பரீட்சார்த்திகள் தத்தமது பீடங்களில் திருத்தியமைக்கப்பட்ட பரீட்சை அட்டவணைகளைப் பார்வையிடலாம்.

யாழ். பல்கலைக்கழகம் | பதிவாளர்.
22.05.2006

(சி/49365)

# மரண அறிவித்தல்

## சின்னராசா பாஸ்கரன் (சுரேஸ்)



கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் மட்டுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னராசா பாஸ்கரன் 21.05.2006 ஞாயிற்றுக்கிழமை அகால மரணம் அடைந்தார்.

அன்னார் சின்னராசா - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் மகேந்திரம் - கமலாவதி தம்பதியரின் அன்பு மருமகனும் சாந்தியின் பாசமிகு கணவரும் றொசானி, கஜானி, றொபின்சன், ஆகியோரின் பாசமிகு தந்தையும் றமேஸ், சதீஸ் (குட்டி - டோகா), வதனி, விசிதா, கீதா, சுதா (பாரின்), வசந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கலா, சந்திரா, உமா, நகுலன், விக்கி (பாரின்) ஆகியோரின் மைத்துனரும் டினேஷ், பிரியா, உமேஷ், நிஷா, விஷ்ணு, நதியா, ஜான்சி, சங்கவி ஆகியோரின் மாமனும் அசோக், ஆசா ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

தகவல்:
றமேஸ் (சகோதரன்).

(சி-49367)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ அகதிகள் கடலில் பலியாவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுங்கள்!

## தமிழக நாளேடு புதிய மாநில அரசிடம் வற்புறுத்தல்

இராமேஸ்வரம், மே 23

இலங்கையில் மீண்டும் பிரச்சினை தொடரலாம் என்று தமிழர்கள் கருதுவதால் தமிழகத்திற்கு அகதிகளின் வருகை அதிகரித்து வருகிறது. இந்தியக் கடல் பகுதியில் அப்பாவி இலங்கை அகதிகளின் உயிரிழப்பைத் தடுக்க காலம் தாழ்த்தாது உடனடி நடவடிக்கையைத் தமிழகத்தின் புதிய அரசு மேற்கொள்ள வேண்டும்.

- இவ்வாறு வற்புறுத்தித் தெரி வித்திருக்கிறது தமிழகத்திலிருந்து வெளிவரும் 'தினமலர்' நாளிதழ். 'இலங்கை அகதிகள் நடுக்கடலில் பலி, முற்றுப் புள்ளி வைக்குமா புதிய அரசு?' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட அதன் செய்தியில் இவ்விடயம் குறித்துப் பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கையில் இராணுவம் மற்றும் சிங்களவர்களின் அராஜகத்திற்குப் பயந்து உயிர் தப்பி வரும் அகதிகள் நடுக்கடலில் பலியாகும் அவலத்திற்கு முற்றுப் புள்ளி வைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கையில் இராணுவத்திற்கும், புலிகளுக்கும் இடையில் பிரச்சினை உருவாகும் போதெல்லாம் இராணுவத்தினரால் பாதிக்கப்படும் அப்பாவித் தமிழர்கள் உயிர் பிழைத்தால் போதும் என்ற நிலையில் தமிழகத்திற்கு அகதிகளாக வருகின்றனர். அகதிகளாகப் புறப்படுவோர் ஐந்தாயிரம் முதல் பத்தாயிரம் ரூபா வரை கொடுத்துப் படகுகள் மூலம் இராமேஸ்வரம் வருகின்றனர். இவர்களை இலங்கைப் படகோட்டிகள் பணத்திற்கு ஆசைப்பட்டு அதிகளவில் ஏற்றி வருகின்றனர். மோசமான படகில் ஏற்றி வந்து நடுக்கடலில் மணல் திட்டுகளில் இறக்கி விட்டு, இந்தியா வந்து விட்டது என்று கூறி ஏமாற்றிச் சென்று விடுகின்றனர். இந்தியக் கடல் பகுதிக்குள் நுழைந்தவுடன் கடற்படைக்குப் பயந்து கரை கண்ட இடங்களில் இறக்கி விட்டுச் சென்று விடுவதும், ஆழமான கடல் பகுதியில் அகதிகளை இறக்கி விட்டுச் சென்று விடுவதும் வழக்கமாக நடந்து வருகின்றன. சட்டத்திற்குப் புறம்பாக அகதிகளை அழைத்து வரும் படகோட்டிகளின் நடவடிக்கைகளினால் கடந்த காலங்களில் பெண்கள், குழந்தைகள், வயதானவர்கள் எனப் பல உயிர்கள் நடுக்கடலில் பலியாகியுள்ளன.

உயிர் தப்பினால் போதும் என்று தமிழகத் திற்குப் படகில் வரும் அகதிகளின் உயிர்களுக்கு எந்த உத்தரவாதமும் இல்லை. கடந்த சனிக்கிழமை நடந்ததுபோல் கடந்த காலங்களில் நடுக்கடலில் படகு கவிழ்ந்து 100 இற்கும் மேற்பட்ட அகதிகள் உயிரிழந்துள்ளனர். அகதிகள் வருகையை முறைப்படுத்தாமல் இருப்பதுதான் இது போன்ற உயிர்ப்பலிகளுக்குக் காரணமாக அமைந்து விடுகிறது. அகதிகளை ஏற்றுக் கொள்வது என்று அரசு முடிவு எடுத்த அதே நேரத்தில் கடலில் அகதிகளை ஏற்றி வரும் படகுகளைக் கண்காணித்து, அவர்களுக்குத் தேவையான பாதுகாப்புக் கொடுப்பதற்கும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

படகுகளை வழியில் நிறுத்திச் சோதனை செய்து, அவர்களை முறையாக ஒரே இடத்தில் கரை இறங்க நடவடிக்கை எடுத்தாலே இது போன்ற உயிர்ப் பலி தொடராது. இதன் மூலம் புலிகள் இயக்கத்தினரின் ஊடுருவலையும் தடுக்கலாம்.

அதேவேளையில், படகுகளை இந்தியக் கடற்படையினர் பிடிக்க மாட்டார்கள் என்ற உத்தரவாதமும் இலங்கைப் படகோட்டிகளுக்குக் கிடைக்கும் பட்சத்தில் அகதிகள் வருகையை முறைப்படுத்தலாம். இலங்கையில் மீண்டும் பிரச்சினை தொடரலாம் என்று இலங்கைத் தமிழர்கள் கருதுவதால் தமிழகத்திற்கு அகதிகளின் வருகை அதிகரித்து வருகிறது. இந்தியக் கடல் பகுதியில் அப்பாவி இலங்கை அகதிகளின் உயிரிழப்பைத் தவிர்க்க, காலம் கடந்து நடவடிக்கை எடுக்காமல் உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு முன்வர வேண்டும்.

- இவ்வாறு அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

### மன்னாரில் தேடுதல்

மன்னார் நகரில் நேற்றுமுன்தினம் மாலை பொலீஸாரும் படையினரும் இணைந்து திடீர் சுற்றிவளைப்புத் தேடுதலொன்றை நடத்தியிருக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் மன்னார் நகரில் பெருமளவு பொலீஸார் குவிக்கப்பட்டனர். அவர்கள் நகரின் பஸ்நிலையம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளைச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர்.

# வேட்டைக்குச் சென்ற இருவர் கிளைமோரில் சிக்கி உயிரிழப்பு!

## மடுக் காட்டுப் பகுதியில் பரிதாபம்

மன்னார், மே 23

மன்னார், மடு, பெரிய பண்டி விரிச்சான் காட்டுப் பகுதிக்கு வேட்டைக்குச் சென்ற இருவர், கிளைமோர்த் தாக்குதலில் சிக்கி உயிரிழந்துள்ளனர்.

பெரிய பண்டிவிரிச்சானைச் சேர்ந்த இராசரத்தினம் மோகன் (வயது-25), சந்திரன் லிண்டன் (வயது-15) ஆகிய இருவரும் வேட்டை நாய்களுடன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் வேட்டைக்குச் சென்றனர்.

வேட்டைக்குச் சென்றவர்கள் நீண்ட நேரமாகியும் வீடு திரும்பவில்லை. ஆனால், அவர்களுடன் சென்ற ஒரு நாய் காயத்துடன் திரும்பியுள்ளது. இதன் பின்னர் காயமடைந்த நாயின் உதவியுடன் காட்டுக்குச் சென்ற உறவினர்கள், வேட்டைக்குச் சென்ற இருவரும் கிளைமோர்க் குண்டு வெடிப்பில் சிக்கி உயிரிழந்திருப்பதைக் கண்டனர்.

இந்தப் பகுதியில் இரு கிளைமோர்கள் பொருத்தப்பட்டிருந்தன எனவும், இதில் ஒன்று வெடித்ததிலேயே மேற்படி இருவரும், அவர்களுடன் சென்ற நாயொன்றும் உயிரிழக்க நேர்ந்ததாகவும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் குறித்து இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிடப்பட்டுள்ளது.

இராணுவத்தினரின் விசேட ஆழ ஊடுருவித் தாக்கும் படையணியே இத்தாக்குதலை நடத்தியதாக விடுதலைப் புலிகள் குற்றஞ் சாட்டியுள்ளனர். இதற்குப் படைத்தரப்பு உடனடியாகக் கருத்தேதும் கூறவில்லை. (க)

MCS 324, Palaly Road, Jaffna. (Near "Alady" Junction)
Fast Track Classes
MS Office, Auto CAD
Visual Basic, VB.Net
Accounting Packages
GIT (A/L Students), ICT (O/L Students)
Hardware Workshop, Internet & E-mail
CorelDraw, PageMaker, Photoshop, Typesetting
Video Editing, Web Designing, Maya
வெளிநாடுகளில் அதிஉயர் வேலைவாய்ப்பினைப் பெற்றுத்தரும் Microsoft, CISCO, ComTIA, Sun Micro System நிறுவனங்களின் நேரடி சான்றிதழ்கள்.
ComTIA, A+ Hardware Technician, Network Professional
Microsoft Certified Professional, System Engineer
CISCO Certified Network Admin.
Sun Certified Java Programmer
27.05.06 இற்குமுன் கற்கைநெறிக்கு பதிவுசெய்யும் மாணவர்களிற்கு கற்கைநெறி கட்டணத்தில் 50% சலுகை
***Supported by UNDP/JRRP***

# நோர்வேத் தூதர் கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தணிக்கும் நடவடிக்கையில் ஈடுபடும் நோக்கோடு விசேட சமாதானத் தூதர் இன்று நோர்வேயிலிருந்து புறப்படுகிறார். அவர் நாளை கொழும்பு வந்து சேருவார். அவரைத் தொடர்ந்து நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி விவகார அமைச்சரும், அனுசரணைப் பணிகளுக்கான குழுவின் தலைவருமான எரிக் சொல்ஹெய்ம் எதிர்வரும் வெள்ளியன்று கொழும்பு வரவுள்ளார்.

இவர்கள் வன்னி சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்துப்பேச திட்டமிட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது. ஆனால், ஐரோப்பிய ஒன்றியத்தின் புலிகள் மீதான உத்தேசத் தடைதிட்டம் குறித்து தீர்க்கமான - புலிகளுக்குச் சாதகமான - திட்டவட்டமான நிலைப்பாடு வெளிப்படாத நிலையில் விடுதலைப் புலிகளின் தலைவர் நோர்வேக் குழுவைச் சந்திப்பதற்கான வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, ஜனாதிபதி உட்பட அரசுத்தரப்புடன் ஆலோசனை நடத்தும் போவரும், சொல்ஹெய்மும் கிளிநொச்சியில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரைச் சந்தித்துப் பேச்சுநடத்தக் கூடுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இரு தரப்புகளுடனும் பேச்சுநடத்திய பின்னர் அமைச்சர் சொல்ஹெய்ம் எதிர்வரும் 30ஆம் திகதி டோக்கியோவில் நடைபெறவுள்ள இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்தில் பங்கேற்க இங்கிருந்து புறப்பட்டுச்செல்லவுள்ளார் என்றும் தெரியவருகின்றது.

## கோப்பாயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்பட்டது.

யாழ்.மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீ நிதி நந்தசேகரன் சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்டார். பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி அவர் உத்தரவிட்டார். (72)

## கந்தரோடையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்தது.

இதேவேளை, கரவெட்டி யாக்கரைப் பகுதியில் நேற்றுமாலை சமர் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. சுமார் அரைமணிநேரம் நடந்த இச்சமரில் கிரனேட் மற்றும் துப்பாக்கி வெடிச்சத்தங்கள் கேட்டன என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

## நோர்வே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் 45 நிமிடங்கள் கலந் துரையாடினார்.

தென்மராட்சி மந்துவில் பகுதியில் ஆலயத்தில் இரவு தங்கியிருந்தவேளை காணாமற் போனார்கள் என்று கூறப்படும் 9 பேரின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் யாழ். செயலகத்தில் நோர்வேத் தூதரைச் சந்தித்தனர். தமது உறவுகளை கண்டுபிடிக்கக் கோரும் மனுக்களை அவர்கள் நோர்வேத் தூதரிடம் அப்போது அவர்கள் கையளித்தனர்.

குடாநாட்டில் தொடரும் கொலைகள் மற்றும் அல்லைப்பிட்டிப் படுகொலைகள் குறித்தும் -

குடாநாட்டின் தற்போதைய நிலைமை குறித்தும் - அரச அதிபரிடம் அவர் விளக்கங்களைக் கேட்டார்.

மக்களின் வாழ்க்கைப் பிரச்சினை, மக்களின் அச்சநிலை, போக்குவரத்து மற்றும் நடமாட்ட நெருக்கடிகள் ஆகியன தொடர்பாக அரச அதிபர் விளக்கிக் கூறினார்.

அதன் பின் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளுடன் தீவகம் சென்ற தூதர் அல்லைப்பிட்டி, வேலணை ஆகிய இடங்களில் மக்கள் அண்மையில் படுகொலை செய்யப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டார்.

தீவகப் படுகொலைகளின்பின்னர் அங்கிருந்து இடம்பெயர்ந்து யாழ். நகரில் தற்போது தஞ்சமடைந்துள்ள மக்கள் நேற்றுத் தீவகம் சென்று நோர்வேத் தூதரிடம் நடந்த சம்பவங்களை விளக்கி னார்கள். அப்பகுதிப் பங்குத்தந்தை மற்றும் கடற்படை அதிகாரிகளையும் நோர் வேத்தூதர் சந்தித்தார்.

பின்னர் அவர் தரைமார்க்கமாக கிளிநொச்சிக்குப் புறப்பட்டார். நேற்று மாலை கிளிநொச்சி சென்றடைந்த அவர் இன்று பகல் முல்லைத் தீவுக்கும் செல்லவுள்ளார். (க)

பரீட்சை வினாத்தாள்கள்
இன்றைய காலத்தில் உங்கள் பிள்ளையின் நிலை?
தரம்:4முதல் தரம்:11வரை
நடுத்தவணைப் பரீட்சை, 8 பாடங்கள்
தரம்:5புலமைப்பரிசில வெற்றித் தேர்வு-6
முன்கூட்டியே பதிவு செய்யும் இடங்கள்
பு.பாலசிங்கம் புத்தகசாலை. யாழ் பஸ்நிலையம்.
செந்தூரன் புத்தகசாலை. பஸ்நிலையம் சாவகச்சேரி.
சயன்ஸ் அக்கடமி. அரியாலை. நல்லூர்.
புலமைப்பரிசில் அனுபவம் மிக்க ஆசிரியர்களின் வினாவிடை வகுப்பு
சனி,ஞாயிறு,செவ்வாய்,புதன்,வியாழன்,காலை: 6.30 மணிக்கு
வினாவிடைப் பயிற்சி. பரீட்சைகள். மீட்டல்.
அரியாலை சயன்ஸ் அக்கடமி
தரம்: 4முதல் :O/Lவரை
பிரிவு:11 ற்கான புதிய ஆசிரியர்கள் தேவை
பயிற்றப்பட்டவர்கள், எமது சுற்றாடலில் வசிப்பவர்கள் மட்டும்.
நேரில் சமூகமளிக்கலாம். (சனி,ஞாயிறு:காலை:10 மணி)
சகல வகுப்புகளும் எவ்வித் தடையின்றி நடைபெறுகின்றன.
சயன்ஸ் அக்கடமி நல்லூர் அரியாலை

## நாளையே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிக் கூறினார்.

தமிழ்ச்செல்வன் தெரிவித்ததாவது:-

அமைதி முயற்சிகளை - பேச்சுக்களைத் - தொடர்ந்து மேற்கொள்ள விடுதலைப் புலிகள் இயக்கம் தடையாக இல்லை. எந்த நேரத்திலும் பேச்சில் பங்கு கொள்ளத் தயாராகவே எமது அமைப்பு உள்ளது.

பேச்சுக்கான புறச் சூழலை உருவாக்குவதிலும், கிழக்குத் தளபதிகளின் பயண ஏற்பாடுகளைச் செய்வதிலும் அரசுதான் தடைகளையும், நிபந்தனைகளையும் ஏற்படுத்தி வருகின்றது.

இந்த நிலையை நீக்கி சுமுக நிலையை அரசு உருவாக்கினால், எப்போதும் பேச்சை ஆரம்பிக்கத் தயாராக இருக்கின்றோம்.

பேச்சை ஆரம்பிக்கத் தடையாக இருப்பது அரசுதான். நாம் அல்லர். - என்றார் அவர். (உ)

## விடத்தல்பளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரால் கைதுசெய்யப்பட்ட குறிப்பிட்ட சிப்பாய், சாவகச்சேரி நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்டார். அப்போது நீதிவான் அந்தச் சிப்பாயை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

உயிரிழந்த குடும்பஸ்தரது சடலம், பிரேத பரிசோதனைக்காக நேற்றுப் பிற்பகல் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. (117-190)

## சர்வமத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி நிலையத்தைச் சேர்ந்த இக்குழுவில் இடம் பெறுவோர் விவரம் வருமாறு:-

வண.பண்டித மதம்பாகம அஸாஜி தேரர் - (அமரபுர நிக்காய), வண. டாக்டர் பத்தேகம சோபிததேரர் - முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், வண. களுப்பான பியரத்ன தேரர் - புரண மகாவிகாரை, வண.சியம்பலாகஸ்வெவ விமலசாகர நாயக்க தேரர் - வடக்கு - கிழக்கு பிரதம சங்கநாயக்கர், கலாநிதி பல்லேகந்த ரத்ன சார தேரர் - அமரபுர நிக்காய, வண. கலகமகே தர்மரஞ்சித நாயக்க தேரர்- அமரபுர நிக்காய., வண. வெல்கம தமிஸ்வர நாயக்கதேரர் - கொலன்னாவ விகாரை, வண. பிதா டேமியான் பெர்னாண்டோ - கியூடெக் - கரித்தாஸ் தேசியப் பணிப்பாளர்., கலாநிதி ரென்ஸி பெரேரா - தலைவர், சமயங்களுக்கிடையான சமாதான மன்றம், வண. பிதா அநுர பெரேரா - கண்டி மெதடிஸ்த திருச்சபை, எஸ்.பி. அந்தோனிமுத்து - இணைப்பாளர், கியூடெக் - கரித்தாஸ்.

CHEMISTRY
GROUP 2007 A/L
Organic Mon. - Fri. 3.00p.m.
இரசாயன சமநிலை Mon. - Fri. 6.00a.m.
ஆரம்பம்:- 25.05.2006 வியாழன்
பல்கலைக்கழகம் முன்பாக, திருநெல்வேலி.
By: VAKEESAN
2008 வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன
Cont. 0779771936

A/L 2006
பல்கலைக்கழக அனுமதியை தீர்மானிக்கும்
[illegible]
(C.G.T.)
வழிகாட்டி
[illegible]
பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா, சுப்பிரமணியம், சிதம்பரப்பிள்ளை

## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை முரளிதரன்

460/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட பொன்னுத்துரை முரளிதரன் நேற்று மாலை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

460/5, நாவலர் வீதி,
(பாப்பையா கடைக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறு[illegible]இல் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.05.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org